305

ழக வெளியீடு - உ௫௨

சொல்லரசர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 OCT 1940
3534

இளவழகனார்

கழக வெளியீடு—உருஉ

சொல்லரசர்

3382

கழகத் தமிழ்ப் புலவர்
திரு. தி. சு. பாலசுந்தரம் பிள்ளையவர்கள்
(இளவழகனர்)
எழுதியது

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை

விக்கிரம—ஆவணி

(Copy-right)

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., :
TIRUNELVELI & MADRAS.

SEPTEMBER 1940

The Jupiter Press, Madras.

922.945
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 OCT 1940
MADRAS

முகவுரை

சமய அறிவு, ஒழுக்கம், கடவுளிடத்திலும் உயிர்களிடத்திலும் அன்பு, பொதுத்தொண்டு முதலியவற்றில் சிறுவர்கள் ஊக்கங் கொள்வதற்குப் பெரியோர் வாழ்க்கை வரலாறுகள் மிகவும் உதவியா யிருக்கின்றன. முற்கால பிற்கால நிலைமைகள் தெரிந்துகொள்வதற்கும் அவை உதவும்.

அம் முறைமையில், சொல்லரசர் என்னும் இந்நூலும் வெளிவருகின்றது. சைவ சமய குரவருள் ஒருவரான திருநாவுக்கரசு நாயனாரது வாழ்க்கை வரலாற்றை இது விளக்குகிறது. இது சேக்கிழார் பெரியபுராணத்தை அடியொற்றி எழுதப்பட்டிருக்கிறது.

இந்நூல், கீழ்வகுப்பு மாணவர்கட்குப் பயன்படும்படி சிறு சிறு தொடர்களால் எளிய தமிழ் நடையில் விளங்க எழுதப்பட்டிருக்கிறது. மாணவர்கள் இளம்பருவத்திலேயே இலக்கிய உணர்ச்சியும் செந்தமிழ் இன்பமுங் கொள்ளும்படி இந்நூல் இடையிடையே நல்ல நல்ல சொற்களோடும் பொருள்களோடும் செய்யுள்களோடும் இணைந்து இயலுகின்றது.

கல்வித் தலைவர்கள் தக்க ஆதரவுகள் தருவார்களென்று நம்புகிறோம்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்

க.	பிறப்பு	...	...	க
உ.	இளம்பருவம்	...	...	சூ
ங.	தருமசேனர்	...	...	ώ
ச.	திலகவதியார்	...	...	கங
ரு.	சூலைநோய்	...	...	கஅ
சூ.	பல்லவன் செயல்	...	...	உரு
எ.	திருஞானசம்பந்தர் நட்பு		...	ஙங
அ.	அப்பூதியடிகள் தொண்டு		...	சக
கூ.	திருக்கோயில் வழிபாடு	...	...	சசூ
ώ.	திருக்கயிலைக் காட்சி	...	...	ருச
கக.	அப்பர் திருமடம்	...	...	ருகூ
கஉ.	திருவடிப் பேறு	...	...	சூஉ
	அருஞ்சொல் உரை	...	...	சூரு

சொல்லரசர்

க. பிறப்பு

தமிழ்நாட்டில் முன்பு, சோழநாடு, சேரநாடு, பாண்டி நாடு எனப் பல நாடுகள் இருந்தன. அவற்றுள் திருமுனைப்பாடி நாடு என்பதும் ஒன்று.

அது நீர்வளம் நிலவளம் குடிவளம் என்னும் பல வளங்களை உடையது. அந்த நாட்டில், வயலுக்கு நீர் பாய்ச்சும் வாய்க்கால்களில் வரால் மீன்கள் சரேலென்று ஓடும். அம் மீன்கள் தகடுபோலத் தட்டையாயிருக்கும். கரும்புத் தோட்டங்களில் கருப்பங் கழிகள் வெடிப்பு விட்டுக், கணுக்களில் சாறு பொழியும். நாலா பக்கங்களிலும் நெற்பயிர் தலைவளைந்து ஆடிக்கொண்டிருக்கும். பாக்கு மரங்கள் குலைதள்ளிச் செழிப்பாய் வளர்ந்திருக்கும். ஏர் உழுகின்ற படைச்சால்களிற்கூட நல்ல முத்துக்களைக் காணலாம். குளங்களிலெல்லாம் செங்கழுநீர் மலர்கள் அழகாகப் பூத்து மணம் கமழ்ந்துகொண்டிருக்கும். இனி, ஊர்களிலோ என்றால், வீடுகளின் மேல்மாடங்களிலிருந்து மணமுள்ள அகில் புகைகள் மேகம்போல வானத்தில் எழுந்துபோவது ஒரு காட்சியாயிருக்கும். அவ்வூர்களில் இன்னும் ஒரு பெரிய சிறப்பு உண்டு. என்ன தெரியுமா? அவ்வூர்களில் ஒவ்வொரு வீட்டிலும், அங்குள்ளவர்கள்,

வருகின்ற விருந்தாளிகளுக்கு எப்போதும் சோறு படைத்துக்கொண்டே இருப்பார்கள். இதுதான் வாழ்க்கைக்கே சிறப்பானது !

திருமுனைப்பாடி நாட்டின் இவ்வளவு வளங்களையும் **சேக்கிழார்** என்னும் பெரியார்,

"கால்எல்லாம் தகட்டுவரால் ;
கரும்புஎல்லாம் கண்பொழிதேன் ;
பால்எல்லாம் கதிர்ச்சாலி
பரப்புஎல்லாம் குலைக்கமுகு
சால்எல்லாம் தரளநிரை
தடம்எல்லாம் செங்கழுநீர்
மேல்எல்லாம் அகில்தூபம்
விருந்துஎல்லாம் திருந்துமனை"

என்று ஒரே பாட்டில் அழகாகப் பாடியிருக்கிறார்.

இப்படிப்பட்ட திருமுனைப்பாடி நாட்டில், **திருவாமூர்** என்று ஒரு சிறந்த ஊர் உண்டு. அதில் **புகழனார்** என்பவர் ஒருவர் இருந்தார். இவர் வேளாள மரபினர் ; சைவர் ; இவர் குடிக்குக் 'குறுக்கையர் குடி' என்று பெயர். புகழனார் நல்லவர். சிவபெருமான்மேல் மிக்க அன்புடையவர். இவர் மனைவியாரும் இவரைப்போலவே இனிய தன்மை வாய்ந்தவர். அதனால் அந்த அம்மையாரை எல்லாரும் **மாதினியார்** என்று அழைத்துவந்தனர். புகழனாரும் மாதினியாரும் மகிழ்ச்சியாக இல்லறம் நடத்தி வந்தார்கள்.

திருவருளால் இவர்களுக்கு, முதலில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குத் **திலகவதியார்** என்று பெயர்

இட்டார்கள். அக் குழந்தை அழகும் அறிவும் வாய்ந்து விளங்கிற்று.

அதன்பின் சில நாட்களிலெல்லாம் ஆண்டவன் அருளால், புகழனருக்கும் மாதினியாருக்கும் ஓர் அருமையான ஆண் குழந்தையும் பிறந்தது. குழந்தை பிறக்கும் போதே அதன் முகத்தில், ஒரு தெளிவான ஒளி துலங்கிற்று. எல்லாரும் **மருள் நீக்கி** என்று பெயர் வைத்தார்கள். குழந்தைகள் இருவரும் சைவசமயச் சீருடன் செல்வமாய் வளர்ந்துவந்தார்கள்.

திலகவதியார் வளர்ந்து மணப்பருவம் அடைந்தார். அவருக்குத் திருமணம் செய்யவேண்டுமென்று பெற்றோர்களுக்கு எண்ணமுண்டாயிற்று. அப்போது, 'கலிப்பகையார்' என்னும் நல்லோர் ஒருவர், திலகவதியாரைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினர். பெற்றோரும் அவருடைய நற்குணம் நற்குலம் முதலானவற்றைக் கண்டு அங்ஙனமே செய்ய இசைந்திருந்தனர்.

ஆனல், திருமணம் நடப்பதற்குள், திலகவதியாருக்குத் தந்தையாரான புகழனர் இறந்துவிட்டார். அவர் பிரிவாற்றமல் தாயாரும் மாண்டுபோனர். பாவம், திலகவதியாரும் மருணீக்கியாரும் என்ன செய்வார்கள்! இப்போது அவர்களுக்குத் தந்தையும் இல்லை; தாயும் இல்லை. யார் துணையும் இல்லாமல் இருவரும் தனியாய் நின்று வருந்தினர்கள்.

இப்படியிருக்கும்போதே, ஆ, அவர்களுக்கு இன்னெரு கொடுந் துன்பமும் உண்டாயிற்று. திலகவதியா

ரைத் திருமணம் செய்துகொள்வதற்கு எண்ணியிருந்த கலிப்பகையாரும், ஒரு நாள் போர்க்களத்தில், திடீரென்று உயிர்விடும்படி நேர்ந்துவிட்டது. இனித் திலகவதியார் பாடு என்ன ஆவது! மருணீக்கியார்தாம் என்ன செய்வார்! இருவரும் கண் கலங்கி நின்று தவித்தார்கள்; ஆறாத் துயரமுற்று அழுதார்கள். முடிவில் திலகவதியார் தாமும் உயிர்விடத் துணிந்துவிட்டார்.

'எந்தையும்எம் அனையும்அவர்க் கெனைக்கொடுக்க இசைந்தார்கள்
அந்தமுறை யால்அவர்க்கே உரியதுநான்; ஆதலினால்
இந்தஉயிர் அவருயிரோ டிசைவிப்பன்' எனத்துணிய,
வந்தவர்தம் அடியிணைமேல் மருணீக்கி யார்விழுந்தார்.''

மருணீக்கியார் உள்ளம் பதைத்தது. ஓடித் தமக்கையார் திருவடிகளில் விழுந்து கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். 'அக்காவோ, அக்கா, ஆ, என்ன காரியஞ் செய்யத் துணிந்துவிட்டீர்கள்! அப்பாவும் இறந்துவிட்டார்கள்; அம்மாவும் மாண்டு போனார்கள். ஐயோ, நீங்களுமா உயிர் துறக்கவேண்டும்? நீங்களும் இல்லாவிட்டால், நான் எங்கே போய் நிற்பேன்? நீங்கள் இருக்கிறீர்கள் என்றன்றோ, நான் உயிரோடு இருக்கிறேன். நீங்கள் உயிர் விடுவதானால், முதலில் நானே உயிர் இழக்கிறேன்' என்று கதறி அலறி நைந்து உருகினார். அவர் கண்களிலிருந்து நீர் ஆறாய்ப் பெருகிற்று.

திலகவதியார் என்ன செய்வார்? தம்பி இப்படிப் புலம்புவதைப் பார்க்க அவர் நெஞ்சம் பொறுக்குமா? அவர் உள்ளம் உருகிவிட்டது. அவர் உடனே மருணீக்கியாரை வாரியெடுத்து அன்போடு தழுவிக்கொண்டு அவர்

கண்ணீரைத் துடைத்துத், 'தம்பி, நீ அழாதேயப்பா; உன் வருத்தத்தைப் பார்த்தால் எனக்கு இன்னும் அழுகை அடைத்துக்கொண்டு வருகிறது. நான் உன்னை விட்டுப் பிரியவில்லையடா; கண்மணி, நான் உனக்காகவே இனி உயிர் தாங்கிக்கொண்டிருப்பேன். நீ சும்மா இரு; அஞ்சவேண்டாம்' என்று ஆர்வமாகச் சொல்லி அவரைத் தேற்றினர். தம்பியாரும் ஒருவாறு தேறி ஆறுதலாக இருந்தார்.

"தம்பியார் உளராக வேண்டும்என வைத்ததயா
உம்பருல கணையவுறு நிலைவிலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யார்இருந்தார்."

உ. இளம்பருவம்

மருணீக்கியார் சிறுபோதிலேயே ஓர் உயிருக்கும் தீங்கு செய்யமாட்டார். தமக்குப் பழக்கமான பிள்ளைக ளோடும் முரட்டுத்தனமாக ஒன்றும் பேசமாட்டார். மற்றச் சிறுவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டைசச்சரவு செய்து கொண்டாலும் அவர்களுக்கு அறிவு சொல்லுவார்:

அவர் தமது உடம்பை எப்போதும் தூய்மையாக வைத்துக்கொள்வார். அழுக்கில்லாத துணியையே இடுப் பில் கட்டுவார். எல்லாப் பிள்ளைகளுக்கும் இவரிடத்தில் அன்பும் மதிப்பும் உண்டு. சில வேளைகளில் அச் சிறுவர் களுக்கு நல்ல கருத்துகளும் பின் வருமாறு எடுத்துச் சொல்லுவார்.

'நண்பர்களே, நாம் காலையில் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போதே சில நல்ல நினைவுகளை நினைக்க வேண்டும். இன்று நான் யாருக்கும் துன்பம் செய்யக் கூடாது; புழு பூச்சிகளுக்கும் செடி கொடிகளுக்குங்கூட இன்னல் இயற்றக்கூடாது; யாராவது துன்பப்பட்டால், நான் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும்' என்று நம்மில் ஒவ்வொருவரும் உருக்கமாக எண்ணிக் கொள்ளவேண்டும்; எண்ணிக்கொள்வதுமட்டும் போதாது; ஒவ்வொரு நாளும் யாருக்காவது ஏதாவது உதவி செய்ய வும் வேண்டும்.

குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமென்று சிலர் கேட்பார்கள்; உடனே அதனைக் கொண்டுவந்து கொடுக்க வேண்டும். தெருவில் சிலர் பசியோடு வந்து கூத்துக்

கொண்டிருப்பார்கள்; வீட்டில் உள்ளவர்களிடம் உடனே சொல்லவேண்டும். வழி தெரியாமல் சிலர் திகைத்துக் கொண்டிருப்பார்கள்; அவர்களுக்குப் பொறுமையோடு வழியும் அடையாளங்களுமெல்லாம் சொல்ல வேண்டும். வெயில் பொறுக்காமல் வீட்டின் நிழலில் தங்கவும் சிலர் வருவார்கள். மழையில் நனைந்து குளிர் உதற உதற வீட்டு ஓரமாய் வந்து தங்குவாரும் உண்டு. ஆடு மாடுகள் முதலான ஏழை உயிர்களும் சில வேளைகளில் இப்படியே வந்து தங்கும். சிலர், வழிநடந்துவருங் களைப்பினால் தள்ளாடி வந்து, வீட்டுத் திண்ணையின்மேல் உட்காரவுங் கூடும். அக்காலங்களிலெல்லாம், அவர்களைத் திட்டித் துரத்தாமல் கூடியவரையில் அன்பும் இரக்கமும் காட்டி, அவர்களுக்கு இடம் கொடுத்து உதவுவது நல்லது.

இன்னும், நாம் இருக்கும் இடங்களில் ஆடுகளும் மாடுகளும் கோழிகளும் குருவிகளும் குரங்குகளும் உயிர்வாழ்கின்றன. அணிப்பிள்ளை கீரிப்பிள்ளை மணிப்புறா முதலான சிற்றுயிர்களையும் நாம் பார்க்கிறோம். மயிலும் குயிலும் கிளிகளும் அங்கங்கும் காணப்படுகின்றன. நன்றியறிவுள்ள நாய்களை நம்மவர்கள் வளர்க்கிறார்கள். இவைகளெல்லாம் நம்மைப்போன்ற உயிர்களேயாகும். இவைகளில், நமக்கு உதவி செய்யும் உயிர்களும் உண்டு. நாம் ஒன்றும் தீங்கு செய்யாமலிருந்தால் அவைகளும் நமக்குத் தீங்கு செய்யமாட்டா. ஆகையால், நாம் இப்படிப்பட்ட உயிர்களுக்குக்கூட ஒன்றும் கெடுதி செய்யலாகாது.

நமது நாட்டில் இன்னொரு பெரிய கொடுஞ்செயல் நடக்கிறது. ஐயோ, அதைச் சொல்லுவதற்குக்கூட நாக்கு

எழவில்லை. நம்மவர்களில் சிலர் ஆடு கோழி முதலான வாயில்லாத ஏழை உயிர்களைப் பிடித்துப் பதைக்கப் பதைக்க அவற்றின் கழுத்தை வெட்டி, அவற்றின் தசையைக் கறி சமைத்துத் தின்னுகிறார்கள். நமது உடம்பில் ஒரு சிற்றெறும்பு கடித்தாலும் நமக்கு நோவு பொறுக்க முடியவில்லை. உடம்பு துடிக்கத் துடிக்க இரத்தம் ஒழுக ஒழுக அவற்றின் கழுத்தை அரியும்போது ஆ, அவைகள் என்ன பாடு படும்! நினைத்தாலும் நெஞ்சம் நடுங்குகின்றது; ஆதலால், நாமெல்லாம் அப்படிப்பட்ட பெருந் தீய செயல்களில் சிறிதும் கலந்துகொள்ளக்கூடாது.

இன்னும், நாம் நடக்கும் வழிகளில் எத்தனையோ சிறு சிறு பூச்சிகளும் புழுக்களுமெல்லாம் இருக்கின்றன. மக்கள் முரட்டுத்தனமாய் நடக்கும்போதும் ஓடும்போதும், அவைகளில் சில மிதியுண்டு இறந்துபோகின்றன. ஆதலால் நாமெல்லாரும் கூடிய வரையில், தரையில் மெதுவாகக் கால்வைத்து நடக்கவும் உலவவும் பழகிக் கொள்ளுவது நல்லது.

கடைசியாக இன்னொன்றையும் நாம் கருத்தில் வைக்க வேண்டும். மரம் செடி கொடிகளுக்குக்கூட உயிர் உண்டு என்பதைப் பலர் மறந்துவிடுகிறார்கள். மரங்களின் வேரை வெட்டுதல், செடிகளை வேரோடு பிடுங்குதல், கொடிகளின் முனைகளைக் கிள்ளுதல் முதலிய வேலைகளைச் சிறுவர்களில் சிலர் விளையாட்டுத்தனமாகச் செய்துவிடுகிறார்கள். அவர்கள் அப்படிச் செய்யும்போதெல்லாம், அம் மரங்களும் செடிகளும் கொடிகளும் அழத் தொடங்குகின்றன. அவைகள் அழுவது நம் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், அவை

அழுகின்றன' என்று பெரியோர்கள் உறுதியாகச் சொல்லுகிறார்கள். ஆகையால், அப்படிப்பட்ட பொல்லாங்கான வேலைகளையும் யாரும் ஒருபோதும் செய்யக்கூடாது.

மரஞ் செடி கொடிகளுக்கு நாம் உதவிசெய்ய வேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. அவைகள் உள்ள இடத்தில் குழிகள் வெட்டி நீர் ஊற்றினால், அவைகள் செழுமையாய் வளரும். கொம்பில்லாத இடங்களில் தாவிப் போகும் பச்சைக் கொடிகளைக், கொம்புள்ள இடங்களில் தூக்கி விட்டால், அவைகள் அந்தக் கொம்பைச் சுற்றிக் கொண்டு நன்றாய்ப் படரும். இப்படிப் பல செய்யலாம்.'

மருணீக்கியார் பேச்சுகள் இவ்வளவு அருமையாக இருப்பதைத் திலகவதியாருங் கேட்டு அகமகிழ்வார். 'தம்பிக்கு இப்போதே உயிர்கள்மேல் எவ்வளவு இரக்கம் இருக்கிறது; நமக்கு நல்ல குணமுள்ள தம்பி வாய்த்தது நாம் செய்த பெரும் புண்ணியமே ஆகும்' என்று நினைப்பார்.

௩. தருமசேனர்

பதினாறாவது வயது பிறப்பதற்குள்ளாகவே மருணீக்கியார் சிறந்த அறிவு நூல்களை நன்றாகப் படித்துக்கொண்டார். அவருக்கு அருமையான கருத்துகளெல்லாம் விளக்கமாகப் புலப்பட்டன. அவற்றுள் இரண்டு கருத்துகள் அவருக்கு மிகவும் விருப்பமாக இருந்தன. '**உலகமும் உலகத்தில் உள்ளவர்களும் என்றும் நிலையாக இருப்பதில்லை**' என்பது ஒன்று. ஆதலால், '**கூடுமான வரையில் எல்லாருக்கும் உடனே உதவி செய்ய வேண்டும்**' என்பது இன்னொன்று.

இந்த நிலையாமை எண்ணங்களால் மருணீக்கியார் திருமணங்கூடச் செய்துகொள்ளவில்லை. யாருக்கு என்ன உதவி செய்யலாம் என்பதிலேயே அவர் கருத்தாயிருந்தார். இதனால் அவர் அங்கங்கும் உணவு விடுதிகள், தண்ணீர்ப் பந்தர்கள், சோலைகள், சாலைகள், குளங்கள், கிணறுகள் முதலியன அமைத்தார். மக்களுக்குப் பலவகையிலும் இவை உதவியாயிருந்தன. ஏழை எளியவர்கள் ஏதாவது ஒன்று விரும்பினால், உடனே பரிவோடு கொடுப்பார். கல்வி கேள்விகளில் வல்ல பெருமக்கள் மேலு மேலும் வசதியாக வாழும்படி அவர்களுக்கு வேண்டுவன உதவுவார். மருணீக்கியாருடைய செல்வமெல்லாம் இந்த அற வழிகளிலேயே செலவழிக்கப்பட்டன.

தமிழ் நாட்டில் அந்தக் காலத்தில் அங்கங்கும் சமண மதம் பரவியிருந்தது. மதம் என்பதற்குக் கோட்பாடு என்பது பொருள். சமணர்களின் கோட்பாடு சமண மதம் எனப்பட்டது. அதன் கருத்து: 'சும்மா கடவுள் கடவுள்

என்று சொல்லிக்கொண் டிருப்பதில் பயனில்லை; எந்த உயிருக்கும் துன்பம் செய்யாமல் அருளோடு உயிர்வாழ வேண்டும்; இதிலிருந்து எல்லா நலமும் உண்டாகும்' என் பது. மருணீக்கியார் சைவ மதத்தில் பிறந்தவர். சைவ மதத் தின் கருத்து: 'இருக்கும் கடவுளை நினையாமலிருப்பது எப் படி? அவரோ எல்லாருக்கும் உதவி செய்துகொண்டும் இருக்கிறார். அப்படிப்பட்டவரை ஒருநாள் ஒருபொழு தாகிலும் நினையாமலும் வாழ்த்தாமலும் இருப்பது நல்ல தாகாது. எந்த உயிருக்கும் துன்பம் செய்யாமல் அரு ளோடு உயிர்வாழவேண்டியது கட்டாயமே; ஆண்டவ னிடத்தில் அன்பிருந்தால்மட்டுமே, அவன் ஆட்சியில் அடங் கிய உயிர்களிடத்திலும் அப்படி இரக்கங்காட்ட முடியும். ஆதலால், ஆண்டவனிடத்தில் அன்பும் உயிர்களிடத்தில் அருளும் கொண்டு உயிர்வாழ்வதுதான் நல்லது. அதுவே நன்மை பெறுவதற்கு வழி!' என்பது. சமணர்களும் சைவர்களும் அவரவர் கருத்துகளுக்கு ஏற்ற பழக்கவழக் கங்களும் அடையாளங்களும் உடையவர்களாக இருந்தார் கள்.

அந்தக் காலத்தில், தங்கள் கோட்பாட்டைப் பரவச் செய்வதற்காகச், சமண் குருமார் பலர், அங்கங்கும் இருந்த னர். அவர்கள் இருப்பிடங்களுள், பாடலிபுத்திரம் என் னும் ஊரும் ஒன்று. அங்கே அவர்களுக்கு ஒரு மடமும் உண்டு. சமணர்கள் மடத்துக்குப் 'பாழி' என்பது பெயர்.

ஒருநாள் மருணீக்கியார் பாடலிபுத்திரத்துக்குப் போக நேர்ந்தது. அங்கே இருந்த சமண்குருமார் அவருக் குத் தம் சமணசமயக் கருத்தை எடுத்துச் சொன்னார்

கள். மருணீக்கியார் இளமையிலிருந்தே உயிர்களிடத்தில் அருளொழுக்கம் உடையவர்; எந்நேரமும் ஈகைவினையி லேயே தலைநின்றவர். அதுவே அவரது முதல் நோக்கமா யிருந்தது. ஆதலால், தமது எண்ணமும் சமணர்களின் கோட்பாடும் இவருக்கு ஒன்றுபோலத் தோன்றின. மருணீக்கியார் உடனே சமண சமயத்தில் சேர்ந்துகொண் டார். அவர்களைப்போலவே பழக்க வழக்கங்களும் அடை யாளங்களும் உடையவர் ஆனார்.

விரைவில் சமணசமய நூல்களையெல்லாம் நன்றாய்க் கற்றுத் தேறினார். அங்கே இருந்த குருமார்கள் எல்லாரை யும்விட இவரே வல்லவராய் விளங்கினார். சில நாட்களில் மருணீக்கியாரையே அவர்கள் தமக்குக் குருவாக ஏற்படுத் திக்கொண்டார்கள். 'தருமசேனர்' என்று ஒரு புதுப் பெயரும் இவருக்கு இடப்பட்டது. முன்பு மருணீக்கியாரா யிருந்தவர் இப்போது தருமசேனரானார். முன்னே சைவ சமயத்திற் பிறந்தவர், இப்போது சமணசமய ஆசிரியரா னார். பாடலிபுத்திரத்திலிருந்த சமண்பாழிக்கு இப்போது தருமசேனரே தலைவர்.

அப்போது, '**புத்த மதம்**' என்றும் ஒரு மதம் தமிழ் நாட்டில் இருந்தது. தருமசேனர், தமது நுண்ணுணர்வா லும் கல்வி அறிவாற்றலாலும் அந்தப் புத்தமதத்தையும் வாதிட்டு வென்றார். சமணசமயத்தில் இவர் அவ்வளவு வல்லவராய்விட்டார். சமணர்களெல்லாரும் இவருக்கு அடங்கி, இவர் சொற்படி நடந்துவந்தார்கள்.

௪. திலகவதியார்

தருமசேனருக்குத் தமக்கையாரான திலகவதியாருக்கு இந் நிலைமை தெரிந்தது. 'அருளொழுக்கம்' என்பது சைவசமயத்திலும் சிறப்பாகப் போற்றப்படுகிறதே; தம்பி இதற்காகச் சமணசமயத்துக்குச் செல்லவேண்டுமா' என்று கவன்றார். தம்பியார் பிரிந்தபின் திலகவதியார் தனியாக வீட்டிலிருக்க விரும்பவில்லை. இனி உறவினரெல்லாரையும் விட்டு நீங்கி, ஆண்டவனுக்கே அடிமையாகவேண்டும் என்று கருதிப், பற்றற்றவரானார். அதனால் அவர், திருவாமூருக்குப் பக்கத்திலுள்ள **திருவதிகை** என்னுந் திருப்பதிக்கு வந்து சேர்ந்தார். அத் திருப்பதிக்கு அருகில் **கெடில ஆறு** ஓடுகின்றது. திருவதிகையில் சிவபிரான் திருக்கோயில் இருக்கிறது. அக் கோயிலுக்கு 'வீரட்டானம்' என்று பெயர்.

திலகவதியார் நாள்தோறும் பொழுது புலர்வதற்குமுன் துயில்விட்டு எழுந்திருப்பார். உடனே திருக்கெடில ஆற்றுக்குச் சென்று நீராடித், திருநீறும் சிவமணியும் அணிந்து திருக்கோயிலுக்கு வருவார். வழக்கம்போலத் திருவலகு எடுத்துக் கோயிலில் அங்கங்கும் உள்ள குப்பைகளைக் கூட்டுவார். அதன்பின் ஆன் சாணம் கொண்டுவந்து ஆன் நீரில் குழப்பிச் சில இடங்களை மெழுக்கிடுவார். இவ்வளவும் பொழுது விடியுமுன் நிகழ்ந்துவிடும். இதற்குள் கதிரவனும் கறகறவென்று கீழ்ப்பால் தோன்றுவன். திலகவதியார் கைகால்களைக் கழுவித் துப்புரவு செய்துகொண்டு, ஒரு கையில் பூங்கூடையும் மற்றொரு கையில் துறட்டுக் கோலும் ஏந்திப், பூந்தோட்டத்துக்குச் செல்வார்.

பூந்தோட்டத்தில் காலைவேளையில் பூஞ்செடிகளெல்லாம் கிளர்ச்சியாகத் தளிர்த்திருக்கும். இலைகளின் தோற்றமும் அவற்றின் இடையில் மலர்களின் காட்சியும் பார்க்கப் பார்க்கப் பெருமகிழ்ச்சி தரும். கதிரவன் செங்கதிர்கள் அச்செடிகளின்மேல் தோயும்போது, இலைகளும் மலர்களும் மினுமினுவென்று ஒளிவிட்டுக், கண்களைப் பறித்துக்கொள்வதுபோல அவ்வளவு அழகாக விளங்கும். தோட்டத்தில் நுழைந்து இவற்றையெல்லாம் காணும்போது, திலகவதியாருக்குச் சொல்லமுடியாத கிளர்ச்சியும் அளவற்ற மகிழ்ச்சியும் உண்டாய்விடும். உடனே அம்மையார், ஆண்டவனை வழுத்தி, அழகும் மணமும் உள்ள மலர்ந்த பூக்களையும் நிறமான பூவிலைகளையும் கொய்து கூடையில் நிறைத்துக் கொண்டு, வேளையாகத் திருக்கோயிலுக்கு வருவார்.

திருக்கோயிலில், பூக்களை வைத்து மாலைகள் கட்டுவதற்கென்று ஒரு தனி இடம் உண்டு. அதற்குப் 'பூமாடம்' என்று பெயர். திலகவதியார் அம் மாடத்தில் வந்து அமர்ந்து, மலர்களையும் இலைகளையும் வரிசை வரிசையாக அமைத்துப் பற்பல வகையாகத் திருப்பள்ளித் தாமங்கள் தொடுத்துச் சிவபிரானுக்குச் சாத்தும்படி கொடுப்பார்.

இந்தத் திருப்பணிக்காகவே, அம்மையார், அழகான பெரிய பூந்தோட்டம் ஒன்று திருவதிகையில் அமைத்தருளினர். அதற்குத் 'திலகவதியார் பூந்தோட்டம்' என்றே பெயர் உண்டாயிற்று.

அம்மையார் இங்ஙனம் பல பணிகளை அங்கே செய்து வந்தார். இவர் திருத்தொண்டுகள்,

"புலர்வதன்முன் திருஅலகு பணிமாறிப் புனிறுஅகன்ற
நலம்மலிஆன் சாணத்தால் நன்குதிரு மெழுக்குஇட்டு
மலர்கொய்து கொடுவந்து மாலைகளும் தொடுத்துஅமைத்துப்
பலர்புகழும் பண்பினுல் திருப்பணிகள் பலசெய்தார்"

என்னும் பெரியபுராணச் செழும்பாட்டில் நன்கு விளங்கு கின்றன. இப்படியே ஒவ்வொரு நாளும் திருக்கோயில் தொண்டுகள் செய்துகொண்டு, திலகவதியார் அங்கே அமைதியாக இருந்துவந்தார்.

ஆயினும், தம்பியார் சமணசமயத்தில் புகுந்திருந்தது, அவ்வம்மையாருக்கு ஒரு பெருங் குறையாகவே இருந்தது. சைவசமயம் சிறந்ததாயிருந்தும், அதைவிட்டு நீங்கி அயல் மதமான சமணசமயத்தில் அவர் நுழைந்திருப்பது, அம்மை யாருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. 'அருளொழுக்கத்துக் காகப் பாயை இடுப்பில் இடுக்கிக்கொள்வது, தலைமயிரைப் பறித்துக்கொள்வது, நின்று உண்பது முதலான அவ்வளவு கடுமையான பழக்க வழக்கங்கள் தேவையில்லை' என்பது அவ்வம்மையார் கருத்து. அதனுல் தம்பியார் நிலைக்கு இரங் கிச் சிற்சில வேளைகளில் அவர் மிகவும் வருந்துவார். ஏதோ முன் பிறப்பின் தீவினை இருந்துதான் இப்படி அவரை அயல் மதத்தில் தள்ளிவிட்டதுபோலும் என்று எண்ணி ஏங்குவார். அறிவுள்ள தம்பியார் அயல் மதத்தில் இருப்பது, அவருக்கு ஆறுதலாகவே இல்லை.

நாளேற நாளேறத் திலகவதியாருக்கு இதுவே ஒரு பெருங் கவலையாய்விட்டது. தம்பியாரை எங்ஙனமாவது சைவ சமயத்துக்கே திருப்பிவிடவேண்டும் என்று ஓர் உறுதிகொள்ளத் தொடங்கினர். அதற்காக அவர் என்ன

செய்வார்? அவருக்கு யார்தாந் துணை? திருவதிகை இறைவனே தமக்கு உற்ற துணை என்று நினைத்தார். ஆதலால், அப் பெருமானிடமே நாடோறும் தமது குறையைச் சொல்லி வேண்டிவருவாரானார்.

> "தூண்டுதவ விளக்கனையார் சுடரொளியைத் தொழுதென்னை
> ஆண்டருளும் நீராகில் அடியேன்பின் வந்தவனை
> ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தாள
> வேண்டும்எனப் பலமுறையும் விண்ணப்பம் செய்தனரால்."

'ஆண்டவரே, அடியேனுக்குப் பின் பிறந்த இளவல் ஒருவன் உண்டு. அவனுக்கு முதலில் மருணீக்கி என்று பெயர். அவனுக்குத் தேவரீரை அடையும் பேறு இல்லை. முன் பிறப்பின் தீவினை மூண்டிருக்கின்றதுபோலும். இப்போது அவன் சமணசமயத்தில் புகுந்திருக்கிறான். தேவரீரை மறந்துவிட்டான். 'தருமசேனன்' என்று அச் சமயத்துக்கு ஏற்றபடி தன் பெயரையும் மாற்றிக்கொண்டான். அவன் இருப்பது பாடலிபுத்திரம். அவ்வூரிலுள்ள சமண் மடத்துக்கு அவன் தலைவனாயிருக்கிறான். அவன் சைவ சமயத்தில் சேர்ந்து தேவரீருக்குத் திருத்தொண்டு செய்யாமல் அயல்மதத்தில் சிக்குண்டு கிடப்பது, இவ்வேழைக்கு மனம் தாளவில்லை; மிகவும் வருத்தமாயிருக்கிறது. ஏழைகளின் வருத்தத்தை நீக்குவதற்குத் தேவரீரையன்றி வேறு யார் துணை? ஆதலால், தம்பியை எங்ஙன்மாவது சைவ சமயத்துக்கு ஈர்த்துத், தேவரீருக்கும் ஆருயிர்கட்கும் ஒருங்கே திருத்தொண்டுகள் செய்யும்படி, தேவரீரே ஆண்டருளவேண்டும்' என்று திலகவதியார் இங்ஙனம் உருக்கமாக வேண்டிக்கொள்வார்.

திலகவதியாரிடத்தில் சிவபெருமானுக்கு நிரம்பவும் அன்பு உண்டு. மேலும், அவர் தம்பியாருக்கும் பெருமான் அருள் உண்டாகும் நற்காலம் அணுகிவிட்டது. ஒருநாள் திருவதிகை இறைவர் திலகவதியார் கனவில் சென்று, 'அம்மையே, நீ உன் கவலையை ஒழி; உன் தம்பி முன் பிறப்பிலேயே என்னை அடையத் தவம் செய்திருக்கிறான்; நான் அவனுக்குச் சூலைநோய் மடுத்து இனி ஆட்கொள் வேன்' என்று அருளிச்செய்தார். திலகவதியார் விழித் தெழுந்து, சிவபெருமான் திருவருளுக்கு வியந்து மிகவும் நெக்குருகினார்; நாவார வழுத்தி வணங்கினார்.

"பண்டுபுரி நற்றவத்துப் பழுதினளவு இறைவழுவும்
தொண்டரை ஆளத்தொடங்கும் சூலைவே தனைதன்னைக்
கண்டருநெற் றியர்அருளக், கடுங்கனல்போல் அடுங்கொடிய
மண்டுபெருஞ் சூலைஅவர் வயிற்றினிடைப் புக்கதால்."

ரு. சூலை நோய்

பாடலிபுத்திரத்தில் சமண்பாழியில் இருந்த தரும சேனர் திடீரென்று அன்றிரவு அறிவு மயங்கிக் கீழே விழுந்தார். திருவதிகைச் சிவபெருமான், அவருக்குச் **சூலை நோய்** தந்தருளினர். வேதனை பொறுக்க முடியவில்லை.

சூலை நோய் மிகவும் கொடுமையானது. அது வட அன லைப்போல் அவர் குடரை எரிக்கத் தொடங்கிற்று. கொடிய நஞ்சுக்கு ஒப்பாக இருந்தது. வயிறு முழுதும் குற்றலையும் குடைச்சலையும் உண்டாக்கிவிட்டது. ஏதோ ஒன்று வயிற் றின் உள்ளே புகுந்து அங்கும் இங்கும் உருளுவதுபோல வும் புரளுவதுபோலவும் ஓடுவதுபோலவும் நோவு தந் தது. தருமசேனர் தரையெல்லாம் புரண்டு புரண்டு துன் புற்றுர்.

பின்பு அவர், தாம் சமண சமயத்திலிருந்து அறிந்து வைத்த மந்திர மாயங்களெல்லாம் செய்து பார்த்தார். நோய் நிற்கவில்லை. இதற்குள், அண்டை பக்கத்திலிருந்த மற்றச் சமண் குருமாரும் ஊரிலுள்ள சமண் மாந்தர் பல ரும் வந்து ஒன்றுகூடிவிட்டார்கள். தம் தலைவருக்கு ஏதோ தீங்கு வந்துவிட்டதென்று மனம் கலங்கினர்கள். வந்த குருமாரில் சிலர் நீர் மந்திரித்துக் கொடுத்தார்கள்; சிலர் பீலிக் கற்றை பிடித்து, மந்திரம் ஓதியபடியாய் அவர் காலளவுந் தடவினர்கள். சிலர் தங்கள் முதல் குருவான அருக தேவரை எண்ணிப் பலப்பல வகையாய் மந்திரங்கள் உருச் செய்தார்கள். , இவ்வளவு செய்தும் என்ன பயன்? ஒன்றுலும் சூலை நோய் தணிந்தபாடில்லை; அதற்குமாருக

நெய் ஊற்றிய எரியைப்போல் மேலுமேலும் மிகுதியாகப் பெருகிவிட்டது!

தருமசேனருக்கோ வேதனை தாளமுடியவில்லை. பதைக்கிருர்; துடிக்கிருர்; இரண்டு கைகளாலும் அடி வயிற்றைப் பிடித்துப் பிசைகிருர்; சிறிது நேரம் அமுக்கிப் பிடிக்கிருர்; தரையில் கவிழ்ந்து படுத்தும் பார்க்கிருர். 'ஐயோ, இக் கொடிய சூலை நோய் சிறிதும் குறையவில்லையே; வரவரப் பெருகுகின்றதே; என்ன செய்யலாம்' என்று எரிவோடு சொல்லிச் சொல்லி அலறினர். பாவம்; அவர் படுகின்ற துன்பம் அயலில் இருப்பவர்க்கும் பொறுக்கக் கூடியதாக இல்லை; அவர்களால் அது தீர்க்கக் கூடியதாகவும் இல்லை. இன்னது செய்வதென்று ஒன்றுந் தோன்ருமல், உளைந்த நெஞ்சத்தோடு ஒவ்வொருவராய் அவ்விடத்தைவிட்டு நீங்கிச் சென்ருர்கள். விடியும் நேரமும் வந்தது.

இப்போது தருமசேனருக்கு முன் நினைவுகளெல்லாம் வந்தன. தமக்கையார் திலகவதியார் நினைவும் வந்தது. இந்த இடுக்கண் நிலையைத் திலகவதியாருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் ஓர் எண்ணம் அவர் மனத்தில் எழுந்தது. உடனே, தம் சமையற்காரனைத், திருவதிகைக்கு அனுப்பிச் செய்தி அறிவித்துவர ஏவினர். அவன் விரைவாய்த் திருவதிகையை அடைந்தான். அவன் அடைந்த நேரம் காலை நேரமாயிருந்தது.

அருந்தவம் வாய்ந்த திலகவதியார், அந்நேரத்தில் வழக்கம்போல மலர்கள் கொய்து எடுத்துக்கொண்டு, பூந்தோட்டத்தின் புறத்தே அணைந்தார். பாடலிபுத்திரத்திலிருந்து

வந்த ஆள் அவரைப் பார்த்துத், 'தாயே, தேவரீர் தம்பி யார் ஏவலால் அடியேன் இங்கு வந்தேன்' என்ருன். அது கேட்டதும் திலகவதியார் நடுக்குற்றுத், 'தம்பிக்கு ஏதேனும் தீங்கு உண்டா?' என்று வினவினர். 'ஆம் தாயே; நள்ளிரவிலிருந்து ஒரு கொடிய சூலைநோய் அவரை வாட்டிக்கொண்டிருக்கிறது; அங்கே இருப்பவர்கள் என்ன செய்தும் அது நீங்கவில்லை; இச் செய்தியைத் தேவரீருக்கு அறிவித்துத், தாம் உய்யும் வழியைத் தெரிந்துகொண்டு வருமாறு பணித்தனுப்பினர்' என்று அந்த ஆள் வருத்தத்துடன் கூறினன். அம்மையார் அவனை நோக்கி, 'அப்பா, தம்பி இருப்பது சமணப்பள்ளி; நான் அங்கே வருவது பொருந்தாது; இதைத் தம்பிக்குச் சொல்லு' என்று மிக்க வருத்தத்துடன் சொல்லியனுப்பினர். அவனும் அன்று மாலையே பாடலிபுத்திரம் அடைந்து தருமசேனருக்குச் செய்தி அறிவித்தான்.

கேட்ட தருமசேனர், 'ஐயோ, இதற்கு நான் என்ன செய்வேன்' என்று அயர்ந்தார். சிவபிரான் திருவருள் இப்போது அவருக்குக் கூடுதலால், 'இனி இங்கே இருப்பதில் பயனில்லை; உடனே தமக்கையார் திருவடியைச் சென்று சேரவேண்டும்' என்று அவருக்கு எண்ணமுண்டாயிற்று. அன்றிரவே, சமண சமய அடையாளங்களையெல்லாம் களைந்துவிட்டு, சமையல் ஆள் துணையோடு திருவதிகை வந்து சேர்ந்தார். அவருடன் வந்தது இப்போது சூலைநோய் ஒன்றுதான். மிக்க விருப்பத்தோடு திலகவதியார் இருந்த திருமடத்துக்குச் சென்ருர். சென்று, அங்கே எழுந்தருளியிருந்த தமக்கையார் திருவடிமேல் விழுந்து, 'அக்கா,

என் குற்றத்தை மன்னிக்க வேண்டும்; தங்களைத் தனியே விட்டுச் சென்றுவிட்டேன்; ஆண்டவனை மறந்தேன்; எனக்கோ இப்போது வேதனை பொறுக்க முடியவில்லை; என் குறைகளைப் பாராமல் உடனே இக் கொடிய சூலை நோய் தீர வழிசெய்து ஆட்கொண்டருள வேண்டுகிறேன்; எனக்கு வேறு யார் ஆதரவு!' என்று குறையிரந்து அலறினர்.

தாளிணைமேல் விழுந்து அயரும் தம்பியாரைத் திலகவதியார் வாரியெடுத்தார். அம்மையார் நெஞ்சம் வருத்தத்தால் நெக்குருகிக் கண்களில் நீர் பெருகிற்று. பின்பு சிவபெருமான் திருவருளை நினைந்து, 'தம்பி! நீ ஆண்டவனை மறந்து அயல் மதத்தில் நுழைந்தாய். ஆதலால் உனக்கு இத் துன்பம் வந்தது. இத் துன்பத்தைச் சிவபெருமானே உனக்குக் கொடுத்தார். நீ அவரையே பணிந்து வேண்டிக் கொள். இனி அவருக்குத் தொண்டு செய். அவர் உன் துன்பத்தை நீக்கி அருள்செய்வார்' என்று அறிவு கூறினர். தருமசேனர், 'அக்கா, இனி அப்படியே செய்வேன்; நான் இத்தனை நாள் அறியாமற் கெட்டுப்போனேன்' என்று பணிவுடன் உறுதி சொன்னர்.

திலகவதியார் அவரைப் பார்த்துத், 'தம்பி, என் மனம் இப்போதுதான் அமைதி அடைகின்றது. நீ இதுவரையில் திருவருள்கோட்பாடு ஒவ்வாத சமண மதத்தில் இருந்தாய்; இப்போது தெய்வத்தன்மையான சைவ சமயத்துக்குத் திரும்புகிருய். ஆதலால், நீ திருநீறு பெற்றுக்கொள். அயல் மதமான சமண மதத் தொடர்பெல்லாம் இதோடு உனக்கு நீங்கிப் போகும்; நீ புனிதனுவாய்; சைவனுவாய்; சிவ

பிரான் திருமுன் செல்லும் தகுதியும் உனக்கு உண்டாகும்' என்று பரிவோடு சொல்லி, ஆண்டவன் திருநீற்றை அள்ளித் திருவைந்தெழுத்து ஓதி அவருக்குக் கொடுத்தருளினர். தருமசேனர், 'இனி நமக்குப் பெருவாழ்வு வந்தது' என்று எண்ணி, அதனைப் பணிவுடன் வணங்கிப் பெற்றுக்கொண்டார். ஆண்டவனை நினைத்து உடம்பு முழுதும் அணிந்துகொண்டார். தருமசேனரைப் பற்றியிருந்த கலக்கங்களெல்லாம் நீங்கின. இதற்குள், இரவும் நீங்கிப் பொழுது விடியுந் தறுவாய் ஆயிற்று. உடனே திலகவதியார் வழக்கம்போலத் திருவலகும் திருமெழுக்கும் தோண்டியும் எடுத்துக்கொண்டு, தம்பியார் தருமசேனரையும் உடன் அழைத்துக்கொண்டு திருக்கோயிலுக்குச் சென்றார்.

தருமசேனர், 'திருவீரட்டானம்' என்னுந் திருக்கோயிலுள் நுழைந்ததும் அதனை வலம் வந்து, இறைவன் திருமுன்னர் விழுந்து வணங்கினர். திருவருளால் அப்போது அவருக்குத், திருப்பதிகங்கள் பாடவேண்டுமென்று ஓர் உணர்வு தோன்றிற்று. அதனால் அவர் உடனே,

"கூற்றாயி னவாறு விலக்ககிலீர்
கொடுமை பலசெய் தனநான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றாதென் வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே"

என்று அடியெடுத்துப் பத்துத் திருப்பாட்டுகள் பாடி உருகினர். உடனே அவருக்கிருந்த சூலைநோய் முற்றும் நீங்கி

விட்டது. தருமசேனர் இப்பொழுது நலமானர். அவருக்கு மயிர் சிலிர்த்தது. உடம்பு பூரித்தது. இன்பக் கண்ணீர் ஊற்றெடுத்தது. 'சூலைநோய் நமக்கு நல்ல வாழ்வளித்தது' என்று கருதினர். மீண்டும் தரைமிசை வீழ்ந்து இறைவனைத் தொழுது உருகி நின்ருர். அப்போது திருவீரட்டானப் பெருமான் திருவருளால், 'அன்ப, நீ சொல்வளம் வாய்ந்த செந்தமிழ்ப் பாட்டுகளைத் தெள்ளிப் பாடுகின்ருய்; நாக்கு வல்லமை நன்ருயிருக்கிறது. ஆதலால், இனி உனக்கு '**நாவுக்கு அரசு**' என்று உலகமெல்லாம் பேர் ஆகுக!' என்று ஒரு வானெலி எழுந்தது. தருமசேனர் இப்போது **நாவுக்கரசரானர்; திருநாவுக்கரசரானர்.**

திருநாவுக்கரசரின் செய்தி எங்கும் பரவியது. அங்கங்கும் இருந்த சிவனடியார் பலரும் திருவதிகைக்கு வந்து வந்து திருநாவுக்கரசரைக் கண்டு வணங்கிக்கொள்வது வழக்கமாயிற்று. அதுமுதல் அப் பெருமானை, எல்லாரும் 'திருநாவுக்கரசு நாயனர்' என்றே அகம் குளிர வாய்குளிர அழைத்துவந்தனர். அவர் புகழ் மேலுமேலும் ஓங்கிப் பெருகிற்று.

அதுமுதல் திருநாவுக்கரசு நாயனர் ஒவ்வொரு நாளும் திருக்கோயிலுக்குச் செல்வார். உள்ளத்தால் ஆண்டவனை நினைப்பார். வாயால் செழுந்தமிழ்ப் பதிகங்கள் பாடுவார். கையில் உழவாரப் படை ஒன்று வைத்துக்கொண்டு, தம் தமக்கையார் செய்யும் திருவலகுத் திருப்பணிக்கு உதவியாகக், கோயிலில் தரையில் உள்ள புல்லெல்லாம் செதுக்குவார். அவர் உடம்பில் திருநீறும் சிவமணியும் எப்போதும் விளங்கிக்கொண்டிருக்கும். இங்ஙனமெல்லாம் திரு

நாவுக்கரசு நாயனர் சிவபிரானுக்கு ஆளாகிச், சைவத் திருத் தொண்டுகள் செய்துகொண்டு திருவதிகையில் மிகச் சிறப் பாக விளங்கியிருந்தார்.

"மையல்துறை ஏறி மகிழ்ந்தலர்சீர்
வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்
விரவும்சிவ சின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியானம் அருஉணர்வும்
ஈறின்றி எழும்திரு வாசகமும்
கையில்திக ழும்உழ வாரமுடன்
கைக்கொண்டு கலந்து கசிந்தனரே."

அவர் பாடும் திருப்பாடல்களுக்குத் 'தேவாரம்' என்று பெயர் உண்டாயிற்று. 'ஆண்டவனுக்கு மாலை' என்பது அதன் கருத்து.

———

௬. பல்லவன் செயல்

நாயனர் நிலே, பாடலிபுத்திரத்துக்கும் எட்டியது. சமண் குருமாருக்குக் கவலே உண்டாயிற்று. ‘ தருமசேனர் நமக்குத் தக்க தலேவராயிருந்தார் ; அவர், மதம் மாறிவிட்டாரே ; இனி என்ன செய்வது? தருமசேனர் கூரிய அறிவும் தேறிய புலமையும் உள்ளவர் ; அவர் வாது வெல்லுவதில் மிகச் சமர்த்தர் ; இனி அவர் திறமையெல்லாம் சைவசமய வளர்ச்சிக்குப் பயன்படும். தருமசேனர் ஒரு பொறுப்பான தலேமை நிலேயிலிருந்து இப்படியும் சொல்லாமற் போய்விட்டாரே’ என்று பலரும் நிீனத்தனர். முடிவில் அக் குருமார், ‘ இச்செயலே அரசனுக்கு அறிவிப்பதே கடன் ’ என்று கருதி, அரசனிடம் தெரிவித்தனர்.

அந்தக் காலத்தில், முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் என்பவன் அங்கே அரசாண்டு வந்தான். அவனும் சமண மதத்தில் சேர்ந்திருந்தான். அவன், தன் குருமார் சொன்னது கேட்டு வியப்புற்றான். தருமசேனர் செயல் அவனுக்கும் ஏமாற்றமாக இருந்தது. உடனே, திருவதிகைக்குச் சென்று தருமசேனரை அழைத்துவருமாறு அமைச்சர்களே ஏவினன்.

அமைச்சர்கள் சேனேவீரரோடு திருவதிகைக்குச் சென்று நாயனரைக் காணும் பேறு பெற்றார்கள் ; அரசன் கட்டளேயையும் அறிவித்தார்கள். அதற்கு நாயனர்,

“ நாம்ஆர்க்கும் குடிஅல்லோம் ; நமனே அஞ்சோம் ;
நரகத்தில் இடர்ப்படோம் ; நடலே இல்லோம் ;
ஏமாப்போம் ; பிணிஅறியோம் ; பணிவோ மல்லோம் ;
இன்பமே எந்நாளும் துன்ப மில்லே;

தாம்ஆர்க்கும் குடிஅல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழைஓர் காதின்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே"

எனத் திருப்பதிகம் அருளிச்செய்து, 'நாம் அரசனுக்கு ஆள் அல்லோம்; சிவபிரானுக்கே ஆள் ஆனோம்; நீவிர் அழைக்கும்படியான நிலையில் நாம் இல்லை; ஆதலால் நாம் அங்கே வரமாட்டோம்' என்று துணிவாகக் கருத்தறிவித்தார். பின்பு அவர்கள், அவர் திருவடிகளில் விழுந்து மிகவும் வேண்டிக்கொண்டார்கள். அதன்மேல், நாயனார் அவர்கள்பொருட்டு இரங்கி இணங்கினார். எல்லாரும் அரசனிடம் சென்றார்கள்.

அரசன், நடந்த செய்தியை நேரில் கேட்டுத் தெரிந்து கொண்டான். அவனுக்குச் சினம் மூண்டது. 'இனிச்செய்வதென்ன?' என்று அருகிருந்தோரை வினவினான். அவர்கள் 'தருமசேனரை நீற்றறையில் இடவேண்டும்' என்று கூறினார்கள். 'அவ்வாறே செய்க' என அரசன் கட்டளையிட்டான். உடனே அவர்கள், திருநாவுக்கரசு நாயனாரை அழைத்துக்கொண்டு நீற்றறையுள்ள இடத்துக்குப் போனார்கள்; போய், நீற்றறையைத் திறந்து, கனன்று எரியும் தீயின் நடுவில் அவரைத் திடுமெனத் தள்ளிக், கதவை மூடி இறுக்கமான தாழ்க்கோல் இட்டுக், காவலும் அமைத்துத் திரும்பினார்கள்.

திருநாவுக்கரசு நாயனார் இப்போது தீயின் நடுவில் இருக்கின்றார். ஆனால், அத் தீ அவருக்குத் தீது செய்யவில்லை. சிவபெருமானே தீ வடிவமாயிருக்கிறார்; அவர் அடி

யாருக்குத் தீ துன்பந் தருமா? ஆதலால், நாயனருக்கு அந் நீற்றறை ஒரு பொய்கைபோலக் குளிர்ச்சியா யிருந்தது. ஒரு குளக்கரையில் மாலே வேளேயில் நிலவு நேரத்தில் இள வேனிற் காலத்தில் தென்றல் வீசும்போது யாழ் இசைத் துக்கொண்டிருந்தால், ஒருவருக்கு எப்படி இருக்கும்? மிக்க மகிழ்ச்சியா யிருக்குமன்றே! அதைப்போலவே நாயனருக் கும் அந் நீற்றறை குளிர்ச்சியாய் இன்பமாய் இருந்தது. ஆதலால், நாயனர் நலமாகவே ஏழு நாட்கள் அதனுள் இருந்தார்.

முன்னே வந்து நீற்றறையில் தள்ளிச் சென்றவர்கள், ஏழு நாள் கழிந்தபின், மீண்டும் வந்து அதனைத் திறந்து பார்த்தார்கள். நாயனர் சாம்பராயிருப்பாரோ என்னவோ என்பதில் அவர்கட்கு ஐயந்தான். அவர்கள் ஐயுற்றபடியே, நாயனர் நீற்றறையுள், புடமிட்ட பொன்னைப்போல் முன்னை விட அருட்பொலிவோடு, நலமாயிருக்கக் கண்டார்கள். எல்லார்க்கும் வியப்பும் அச்சமும் உண்டாயின. நிலைமையை அரசனுக்கு அறிவித்தார்கள். அரசன், சற்றுநேரம் ஒன் றும் தோன்றுமல் திகைப்பு மேலிட்டிருந்து பின்பு, 'நாய னரை ஒறுப்பது இனி எவ்வாறு?' என்று கருதினன். 'நஞ்சு ஊட்டுவதே இனிச் செய்யத் தக்கது' என்று ஓர் உத்தி கூறப்பட்டது. அரசனும் அங்ஙனமே செய்யக் கட்டளையிட, நாயனருக்கு உடனே கொடிய நஞ்சு ஊட்டப் பட்டது.

ஆனல், அவருக்கு அந்த நஞ்சு ஏதும் தீங்கு செய்ய வில்லை. நலமாகவே இருந்தார். ஒரு காலத்தில் சிவ பெருமான், நஞ்சை அமிழ்தம்போல உண்டதுண்டு. ஆத

லால், அவர் அடியாரான நாயனருக்கும் நஞ்சு அமுதமாக மாறிவிட்டது.

இதைக் கண்டு மனம் மறுகின அரசன் முதலானோர், இனி, 'மத யானையை நாயனர்மேல் ஏவி விடுவதே சரி' என்று துணிந்தார்கள். யானைப்பாகர் கொடியதொரு யானையை நாயனர்மேல் ஏவினர். யானையோ மலைபோலப் புறப்பட்டது. காலில் கட்டியிருந்த சங்கிலிகள் முதலியன அறுந்தன. வழியிலிருக்கும் மாளிகைகளை மறித்து, மண்டபங்களை எடுத்தெறிந்தது. மேலே பறவைகளெல்லாம் அஞ்சி நடுநடுங்கின; கீழே தரை அதிர்ந்தது. யானைக்கு வந்த சினமோ அளவேயில்லை. துதிக்கையைத் தூக்கி வளைத்தபடியாய் ஓவென்று பிளிறிக்கொண்டே நாயனர்மேல் பாய்ந்து வந்தது. நாயனர் நிலை என்னகுமோ என அனைவரும் விதிர்ப்பெய்தினர்.

ஆனல், நாயனரோ, யானையைப் பார்த்துச் சிறிதும் துணுக்குறவேயில்லை. அதற்குமாருக,அவர், 'நாம் திருவீரட்டானத்துப் பெருமானுக்கு அடியோம்; ஆதலால், நாம் அஞ்சக் கூடியது ஒன்றுமில்லை' என்று தீரமாகச் சொன்னர். எவர்க்கும் அடங்காமல் சீற்றமாய் ஓடிவந்த யானை நாயனரைக் கண்டதும், ஆ, என்னே வியப்பு! ஒரு பூனை போல ஒடுங்கி ஒதுங்கி, அவரை வலமாகச் சுற்றிவந்து கீழே விழுந்து பணிந்தது! 'கடவுள் செயலுக்குமுன் ஒரு விலங்கின் செயல் எவ்வளவு!' என்னும் உண்மை அப்போது விளக்கமாகத் தெரிந்தது. யானை பணிந்துவிடவே, அதுகண்ட பாகர், யானையை மேலுமேலும் நாயனர்மேல் பாயுமாறு தூண்டினர். யானை அது பொருமல், உடனே

அப் பாகர்கள் மேலேயே சீறி விழுந்து அவர்களைக் கொன்று, அருகிருந்தோர் பலரையும் மிதித்து உழக்கி நகரம் முழுமையும் கலக்கி, அரசனுக்குப் பெரிதும் கலக்கம் விளைத்தது.

தப்பிய சிலர் அரசன்பாற் சென்று அலறிக் குறை யிரப்ப, அரசனுக்கு மேலுமேலும் சினம் மூண்டு, 'ஆ, அத் தருமசேனரை என்னதான் செய்யலாம்!' என்று எரிவோடு உரத்துச் சொன்னான். பின்பு, அவனும் அங்கிருந்தோரு மாக எல்லாரும் சூழ்ந்து, 'இனி இத் தருமசேனர் எப்படி யும் இந் நிலவுலகத்தில் இல்லாதபடி செய்யவேண்டும்' என்று நெடிது நினைந்து, 'அவரை ஒரு பெரிய கல்லோடு சேர்த்து வலிவாகக் கட்டி, ஒரு படகில் ஏற்றிக்கொண்டு போய், நடுக்கடலில் தள்ளிவிட வேண்டும்; இதுதான் முடிவு' என்று ஒரே தீர்மானமாய் உறுதி செய்தார்கள். திருநாவுக்கரசு நாயனார் அவ்வாறே நடுக்கடலில் தள்ளப் பட்டார்.

ஆயினும் என்? திருநாவுக்கரசர் உறைப்புடைய மெய்த் தொண்டர்! அவர் அஞ்சுவாரா? சிவபிரானை நினைந்து அவன் திருவைந்தெழுத்தை எண்ணி,

"சொல்துணை வேதியன் சோதி வானவன்
பொன்துணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கல்துணை பூட்டிஓர் கடலில் பாய்ச்சினும்
நல்துணை யாவது நமச்சி வாயவே"

என்று வழுத்தினார். சிவபெருமான் திருவருள், அவரைத் தாங்கிற்று. அதனால், நாவுக்கரசரைச் சேர்த்துக்கட்டிய

கல், அப்போது அவருக்குத் தெப்பமாய் மிதக்கத் தொடங்கியது. நாயனர் அதன்மேல் வசதியாக உட்கார்ந்து கொண்டார். பெருமான் திருவருளை எண்ணி எண்ணி நெக்குருகினர். தெப்பம் திருப்பாதிரிப்புலியூரின் பக்கமாகக் கரை சேர்ந்தது. காற்றும் அலையும் நல்லபடியே உதவின. நாயனர் கரையேறினர்.

திருப்பாதிரிப்புலியூரில் இருக்கும் அன்பர்கள் இதனை அறிந்து, கூட்டமாகத் திரண்டு வந்து நாயனரை வரவேற்ருர்கள். நாயனர் அவர்களுடன் அந்தத் திருப்பதியிலுள்ள சிவபிரான் திருக்கோயிலுக்குச் சென்று, இறைவன் செய்த உதவியை நினைந்து உருக்கமாகச் செந்தமிழ்ப் பாடல்கள் பாடினர். 'அடியார்களுக்கு இறைவன் தோன்ருத் துணையாயிருக்கிருன்' என்று, அவ்வுண்மையை எல்லாரும் அறிந்துகொள்ளும்படி, பாடலில் அருளிச் செய்தார். பின்பு திருவதிகைக்குச் செல்லவேண்டுமென்று அவருக்கு ஆவல் எழுந்தது. ஆதலால், வழியில் உள்ள திருப்பதிகளை வணங்கிக்கொண்டு திருக்கெடில ஆற்றைக் கடந்து திருவதிகைப் பதியை அணுகினர். அந்தத் திருப்பதியிலுள்ள அன்பர்கட்குக் கரைகாணு மகிழ்ச்சி உண்டாயிற்று.

உடனே தெருவெங்கும் பந்தர் அமைக்கப்பட்டது. மலர் மாலைகள் தொங்கவிடப்பட்டன. தோரணங்கள் கட்டப்பட்டன. குலைக் கமுகும் குலை வாழையும் அங்கங்கும் நிறுத்தப்பட்டன. எங்கும் மேள ஓசைகள் எழுந்தன. அன்பர்கள் அந் நகரை அழகுக்குமேல் அழகு செய்தார்கள். மிகுந்த மகிழ்ச்சியால் சுண்ணமும் பூவும் பொரிகளும்

தூவினர். இத்தகைய மகிழ்ச்சிப் பெருக்கால் அன்பர்கள் தம்மை மறந்து திருநாவுக்கரசரை வரவேற்ருர்கள். நாய ஞர் திருவதிகையுள் நுழைந்து தெருவழியாய்த், திருவீரட் டானப் பெருமானிடம் ஆவலாகச் சென்ருர்.

அப்போது அவர் நெற்றியில் திருநீறு விளங்கியது. கழுத்தில் சிவமணி பொலிந்தது. அவர் நெஞ்சம் ஆண்ட வன் சேவடியை நினைத்துக்கொண்டிருந்தது. கண்களில் உருக்கக் கண்ணீர் வழிந்தது. அவர் செம்மையான திருவாய், இனிய திருப்பதிகங்கள் ஓதிக்கொண்டிருந்தது. அருகிருந்தாரனைவரும் இத் திருவருள் தோற்றத்தைக் காணும் பேறுபெற்றுத், தலைமேற் கைகுவித்து நாயனுரை வணங்கியும் வாழ்த்தியும் இன்பமெய்தினர்கள். 'நாயனு ருடைய இவ்வருட்பொலிவு கண்டும், அரசன் முதலா னேர்க்கு, எங்ஙனம் கொடுதி செய்யச் சீற்றம் எழுந்ததோ?' என்று அவர்கள் சொல்லிக்கொண்டார்கள்.

நாயனுர் அன்பர்களோடு கூடவே திருக்கோயிலுக் குச் சென்று, திருவீரட்டானப் பெருமானைத் தொழுது கண்ணீர் சிந்தினர். ஆராமையாய்ப் பாடல்கள் பாடினர்; 'அடியேன் முன்னெல்லாம் தேவரீரை மறந்திருந்தேனே' என்று கூறி உருகினர். பின்பு வழக்கம்போலவே நாயனர், நினைத்தல் தொண்டும் பாடல் தொண்டும் உழவாரத் தொண் டும் செய்துகொண்டு திருவதிகையில் தங்கியிருந்தார்.

இந் நிலைமையைப் பாடலிபுத்திரத்திலிருந்த பல்லவ மன்னன் கேள்விப்பட்டான். அவனுக்கு இப்போது மனம் மாறிவிட்டது. நல்லறிவு வந்தது. திருநாவுக்கரசு நாயனர் குற்றமில்லாதவர் என்றும், அவர் கடவுள் அருள்பெற்ற

பெரியார் என்றும் தெரிந்துகொண்டான். உடனே அவனுக்குச் சமண் குருமாரிடத்திலும் சமண் சமயத்திலும் நம்பிக்கை குறைந்தது. சமண் சமயத்துக்குக் கடவுளுண்மை இல்லை என்று தெளிந்துகொண்டான். தெய்வச் சமயம் சேர்ந்த திருநாவுக்கரசு நாயனருக்குப் பல கெடுதிகளும் தெரியாமல் செய்துவிட்டேனே என்று கலங்கினன்.

ஆகையால், அவ்வரசன் திருவதிகைக்கு வந்து, நாவுக்கரசரைப் பணிந்து, தன் குற்றத்தை மன்னிக்கும்படி மிகவும் வேண்டிக்கொண்டான். அன்றுமுதல் அவன் சைவனகத் திரும்பிவிட்டான். சிவபெருமானை வணங்கத் தொடங்கினன். அதனல், பாடலிபுத்திரத்திலிருந்த சமண் பள்ளி முதலானவைகளை இடித்து, அவற்றின் பொருள்களையெல்லாம் கொண்டுவந்து, திருவதிகையில் சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைத்தான். அவன் எடுத்த அத் திருக்கோயிலுக்குக், '**குணதர வீச்சரம்**' என்பது பெயர்.

எ. திருஞானசம்பந்தர் நட்பு

திருநாவுக்கரசு நாயனர் சில நாட்கள் வரையில் திருவதிகையில் தங்கியிருந்தபின், சிவபெருமான் உறையும் மற்றத் திருப்பதிகளையும் கண்டு வணங்க விரும்பினர். ஆதலால் அவர், திருவெண்ணெய் நல்லூர் முதலான பல திருப்பதிகளை வணங்கிக்கொண்டு, திருப்பெண்ணுகடம் வந்து சேர்ந்தார். அந்தத் திருப்பதியிலுள்ள சிவபிரான் திருக்கோயிலுக்குத் 'தூங்கானை மாடம்' என்று பெயர். நாயனர் அத் திருக்கோயிலை அடைந்து வணங்கியபின், பெருமானை நோக்கி, 'ஆண்டவரே அடியேன் இத்தனை நாள் தேவரீரை இகழ்ந்து ஒவ்வாத சமணசமயத்தில் சிக்கியிருந்தேன். அந்நாட்களில் இருந்த உடம்பே எளியேனுக்கு இப்போதும் உள்ளது. இந்த ஒவ்வாத உடம்போடு உயிர்வாழ்ந்திருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. மேலான சைவசமயத்தைச் சார்ந்து தேவரீரை வணங்கப்பெற்றதனல், இவ்வுடம்பும் புனிதமுடையதாதல் வேண்டும். தேவரீருடைய திருவடையாளங்களை உடம்பில் எழுதுவதனல், அது புனிதமுடையதாகும்; தேவரீர் அங்ஙனம் செய்வித்தருள வேண்டும்' என்று விண்ணப்பம் செய்துகொண்டார். சிவபெருமானும் அங்ஙனமே திருவுளங்கொள்ள, உடனே ஒரு சிவபூதம் யாருக்கும் தெரியாமல் திருநாவுக்கரசு நாயனரிடம் வந்து, அவருக்கு ஒரு தோளில் சூலக் குறியும் மற்றெரு தோளில் எருதுக் குறியும் பொறித்தது. நாயனர் அவற்றைக்கண்டு மிகவும் களித்துச் சிவபெருமானை வணங்கினர்.

பின்பு அங்கிருந்து புறப்பட்டார். வழியிலுள்ள திருப்பதிகள் பலவும் வணங்கிக்கொண்டு தில்லையின் பக்கம்

வந்தார். அங்கே சோலையிலிருந்த குயில்களெல்லாம் அவரைக் கூவி அழைத்தன. கிளிகளும் நாகணவாய்ப் பறவைகளும் அவர் திருவுருவத்தைக் கண்டு மகிழ்ந்து, ‘அர’ ‘அர’ என்று சிவபெருமான் திருப்பெயரை முழக்கஞ்செய்தன. மயில்கள், மகிழ்ச்சியால் தோகையை விரித்து விளையாடின. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு திருநாவுக்கரசர் தில்லையை அடைந்தார். தூரத்திலேயே திருக்கோபுரத்தைக் கண்டு வணங்கினார். பின் திருக்கோயிலுக்குச் சென்று ஆர்வத்துடன் அம்பலவாணரைக் கண்டார். அவர் கண்களில் நீர் ததும்பிற்று. அம்பலவாணர் திருக்கூத்தில், ‘என்று வந்தாய்?’ என்று தம்மைக் கேட்பதுபோல நாயனாருக்கு ஒரு திருக்குறிப்புத் தோன்றியது. அவருக்கு அது பேரன்பை விளைத்துவிட்டது. நாயனார் பலமுறையும் விழுந்து விழுந்து தொழுது அகம் உருகினார். தில்லையைவிட்டுப் பிரிய அவருக்கு நெஞ்சம் வரவில்லை. ஆதலால், அவர் அங்கிருந்தபடியே மற்றத் திருப்பதிகளுக்கும் சென்று வணங்கிக்கொண்டு மீண்டும் தில்லைக்கே வந்துவிடுவார். தில்லைத் திருப்பதியில் திருநாவுக்கரசு நாயனார் பல திருப்பதிகங்கள் அருளிச்செய்தார்.

“ பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனே”

என்பதும் அவர் அங்கே பாடிய தேவாரமாகும். இங்ஙனம் இப் பாடல் தொண்டோடு அவர் உழவாரத் தொண்டும் அங்கே செய்துகொண்டிருந்தார்.

இவர் இப்படி இருக்கின்ற நாளில், தில்லைக்குப் பக்கத்திலுள்ள **சீகாழி** என்னும் திருப்பதியில், **திருஞானசம்பந்தப் பிள்ளையார்** என்னும் பெயருடன் ஓர் அந்தணக் குழந்தை விளங்கிக்கொண்டிருந்தது. அப்போது அது மூன்றாண்டுக் குழந்தையாயிருந்தது. அக் குழந்தையின் தந்தையார் பெயர் சிவபாதவிருதயர் என்பது. தந்தையார் ஒரு நாள் நீராடுவதற்காகத் திருக்குளத்துக்குச் சென்றார். திருக்குளம் திருக்கோயிலின் உள்ளே உள்ளது. தந்தையார் அங்கே போனபோது குழந்தையும் கூடவே போயிற்று.

சிவபாதவிருதயர் குழந்தையைக் கரையில் இருத்திவிட்டுக் குளத்தில் இறங்கித் தலை முழுகினர். குழந்தையின் கண்ணுக்குத் தந்தையார் தெரியவில்லை. அதற்கு அழுகை வந்துவிட்டது. உடனே, ஏதோ முன்நினைவு தோன்ற, அது திருக்கோயிலின் கோபுரத்தைப் பார்த்தபடியாய், 'அம்மே' 'அப்பா' என்று அழைத்துத் தேம்பித் தேம்பி அழுதது. அப்போது சிவபெருமான் உமையம்மையாரோடு விடையின்மேல் எழுந்தருளி, அக் குழந்தையின் அருகில் வந்தார். வந்து, குழந்தையின் கண்களைத் துடைத்தார். உமையம்மையார் ஒரு பொன் கிண்ணத்தில் திருமுலைப் பால் கறந்து ஊட்டினர். குழந்தை அப்பாலுண்டு அழுகை ஓய்ந்தது. குழந்தை பருகிய திருமுலைப் பால் ஞானப்பால் ஆகும். ஆதலால், அக் குழந்தைக்கு 'ஞான சம்பந்தர்' என்று பெயர் உண்டாயிற்று.

இதற்குள் சிவபாதவிருதயர் தலை முழுகி எழுந்து கரைக்கு வந்தார். வந்ததும், குழந்தையின் வாயில் பால்

ஒழுகக் கண்டார். அவருக்குச் சினம் எழுந்தது. கையில் ஒரு கோல் எடுத்துக்கொண்டு குழந்தையைக் கடிந்து பார்த்து, 'உனக்கு எச்சில் பால் ஊட்டினவர் யார்? அவரைக் காட்டு' என்று மிரட்டிக் கேட்டார். திருஞான சம்பந்தப் பிள்ளையார் உடனே சிவபெருமானையும் உமையம்மையாரையும் வானத்தில் சுட்டிக் காட்டி, 'இவரே இவ்வாறு செய்தார்' என்று தேவாரம் பாடினர். தந்தையாருக்கு மிக்க மகிழ்ச்சியுண்டாயிற்று. சிவபெருமானும் உமையம்மையாரும் திருக்கோயிலுக்கு எழுந்தருளினர்கள். பின் திருஞான சம்பந்தரும் திருக்கோயிலுக்குச் சென்றார். அங்கிருந்தவர்கள் எல்லாரும் வியந்து அவரோடு கூடவே கோயிலுக்குப் போனர்கள். பிள்ளையார் அங்கே அம்மையப்பரை வணங்கித் திருப்பதிகம் பாடினர். அன்று முதல் அவர், பெருமானை நோக்கி, அழகான செழுந்தமிழ்ப் பதிகங்கள் பாடிக் கொண்டு அங்கே விளங்கியிருந்தார்.

இந் நிகழ்ச்சியைக் கண்டவர்களெல்லாரும், 'ஆ, இப்படிப்பட்ட அருஞ்செயல் எங்கே நடக்கும்! மூன்றாண்டுக் குழந்தை கடவுளை நேரே பார்த்ததே! கடவுளே நேரில் வந்து ஞானப் பால் ஊட்டினரே, இந்தப் பருவத்திலேயே உயர்ந்த செந்தமிழ்ப் பாட்டுகள் பாடுகின்றதே; என்ன வியப்பு; என்ன அருள்; இப்படிப்பட்ட அருள் இதுவரையில் யார் பெற்றார்கள்? இக் குழந்தையின் தந்தையார் செய்த புண்ணியமே புண்ணியம்; தாயார் செய்த பேறே பேறு' என்று கூடிக் கூடிப் பேசிக்கொண்டார்கள். அதைக் கேட்டவர்கள்கூட அப்படியே வியந்து வியந்து பேசிக்கொள்வார்கள். அதனல், இச் செய்தி மிக விரைவில் நாடெங்கும் பரவிற்று.

பரவவே, தில்லையிலிருந்த திருநாவுக்கரசு நாயனருக்கும் இது தெரிந்தது. பிள்ளையாரைப் பார்க்க வேண்டுமென்று அவருக்கு ஆவல் எழுந்தது. ஆகையால், அவர் அப்பொழுதே தில்லைக்கூத்தனை வணங்கிக்கொண்டு, சீகாழிக்குப் புறப்பட்டார். தில்லையின் தெருக்களில் உடம்பினல் புரண்டு வலம் வந்து எல்லையை அடைந்தார். அங்கிருந்தபடியே தில்லைப் பெருமானை வணங்கிக்கொண்டு சீகாழியை நோக்கி நடந்தார். சீகாழியை அணுக அணுக அவருக்கு ஞானசம்பந்தரைப் பார்க்கவும் வணங்கவும் ஆவல் மேலுமேலும் பெருகியது.

திருநாவுக்கரசு நாயனர் சீகாழிக்கு வருகின்ற செய்தி ஞானசம்பந்தருக்கு எட்டிற்று. உடனே அவர் திருநாவுக்கரசரை எதிர்கொண்டு அழைக்க, ஆர்வத்தோடு சீகாழியைக் கடந்து வந்தார். அங்கிருந்த அடியார்களும் சம்பந்தரோடு திரண்டு வந்தனர். கூட்டமாக வருகின்ற இப்பெருங் காட்சி, வழியில் வருகின்ற திருநாவுக்கரசருக்குத் தெரிந்தது. அவர் உள்ளம் களி துளும்பிற்று. உடனே அவர் மிக்க விருப்பத்துடன் விரைந்து வந்து, அடியார் குழாத்தின் நடுவே புகுந்து, ஞானசம்பந்தர் திருவடிகளில் விழுந்து வணங்கினர். அப்போது சம்பந்தர் தம்முடைய திருக் கைகளால் அவரை எடுக்கப்போன தோற்றம், எல்லாருள்ளத்திலும் நீங்காத பேரன்புக்கு இடம் செய்துவிட்டது. திருநாவுக்கரசர் எழுந்ததும், ஞானசம்பந்தக் குழந்தை தம் இரு கைகளும் கூப்பி வணங்கி, 'அப்பரே' என்று அன்போடு அழைத்தது. அதற்குத் திருநாவுக்கரசு நாயனர், 'அடியேன்' என்று பணிவோடு விடை கூறினர்.

திருநாவுக்கரசர் பெரியவராக இருக்கின்றாரென்று ஞானசம்பந்தக் குழந்தை 'அப்பரே' என்று வாய் குளிர அழைத்தது. அவர் அழைத்தது பொருந்தும். ஆனால், திருநாவுக்கரசர் ஞானசம்பந்தக் குழந்தையைக், குழந்தை தானே என்று எண்ணவில்லை. அப்படி எண்ணாமல், 'அடியேன்' என்று பணிவு கூறினர். 'ஆ! திருநாவுக்கரசு நாயனாரின் பணிவை என்னவென்று சொல்லுவது' என்று அனைவரும் வியந்து கொண்டாடினார்கள். அன்றுமுதல் நாவுக்கரசர்க்கு '**அப்பர்**' என்னும் பெயரும் வழங்கலாயிற்று. அப்பர், சம்பந்தரைக் கண்குளிரப் பார்த்துத், 'தேவரீரை வணங்கும் பேறு பெற்றேன்' என்று சொல்லி மகிழ்ந்தார். இங்ஙனம் இருவரும் ஒருவரோடொருவர் அளவளாவி, இன்பக் கடலில் திளைத்தனர்.

பின்பு, இருவரும் சீகாழியிலுள்ள சிவபெருமானை வணங்கும்பொருட்டுத் திருக்கோயிலுக்குச் சென்றார்கள். சீகாழியில் உள்ளவர்கள், இவர்களிருவரும் தெருவே சேர்ந்து செல்லும் திருக்கோலத்தைக் காணும் பேறுபெற்றுத், தமக்குள் மகிழ்ந்து பேசிக்கொண்டார்கள். சிலர் ஞானசம்பந்தரை நோக்கி, 'அருள்கடல் போகின்றது' என்றார்கள்; திருநாவுக்கரசரைப் பார்த்து, 'அன்புக்கடல் போகின்றது' என்றார்கள். இன்னும் சிலர் இருவரையும் நோக்கி, 'இருவரும் இரண்டு புண்ணியக் கண்கள்; இரண்டு சைவக் கண்கள்' என்று புகழ்ந்தார்கள். வேறு சிலர், 'ஒருவர் சிவபிரான் திருவருள்; ஒருவர் உமையம்மையின் திருவருள்' என்று கூறி மகிழ்ந்தனர். சீகாழியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குத் தோணியப்பர்

என்று பெயர். இருவரும் திருக்கோயிலுட் சென்று திருத் தோணியப்பரைக் கண்டு வணங்கி அகமுருகினர். அப் போது திருஞானசம்பந்தர் அப்பரை நோக்கி, ‘அப்பரே, உங்கள் பெருமானை நீங்கள் பாடுங்கள்’ என்று உரிமை தோன்றும்படி கூறினர். அப்பரும் பிள்ளையார் கருத்துக்கு மாறுகூருமல் அங்கு ஒரு திருப்பதிகம் பாடினர். திருப்பதி கத்தின் சுவை பிள்ளையாருக்குப் பேரன்பு விளைத்தது. பின்பு, திருஞானசம்பந்தர் அப்பரை அழைத்துக்கொண்டு தமது திருமடத்துக்கு வந்தார். திருநாவுக்கரசு நாயனரும் பிள்ளையார் திருமடத்தில் திருவமுது செய்து, அவரோடு நட்புரிமையால் அளவளாவிக்கொண்டு அங்கே தங்கியிருந் தார்.

சிலநாள் கழிந்தபின், திருநாவுக்கரசு நாயனருக்குச் சோழ நாட்டிலுள்ள மற்றத் திருப்பதிகளுக்குஞ்சென்று சிவபெருமானை வணங்கவேண்டுமென்று ஆவல் எழுந்தது. பிள்ளையாரின் இசைவுபெற்று, ஒருநாள் சீகாழியி லிருந்து புறப்பட்டார். ஞானசம்பந்தருக்கு அப்பரைப் பிரிவது அருமையாயிருந்தது. அதனல் அவர் நாவுக்கரச ரோடு திருக்கோலக்கா வரையிற் சென்றுர். திருக்கோலக்கா சீகாழிக்கு அருகில் உள்ள திருப்பதி. அங்கே இருவரும் சென்று சிவபெருமானை வணங்கிக்கொண்டதும், பிள்ளை யார் சீகாழிக்குத் திரும்பினர். அப்பர் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு, அப்பால் உள்ள திருப்பதிகளுக்கு எழுந் தருளினர்.

திருப்புன்கூர் முதலான திருப்பதிகளை வணங்கிக் கொண்டார். காவிரியாற்றை அடைந்து, அதன் இரு

கரையிலும் உள்ள பல திருப்பதிகளை வணங்கினர். அப்படியே திருவாவடுதுறைக்கு வந்து வணங்கி, அங்கே சில நாட்கள் தங்கினர்.

அங்கிருந்து புறப்பட்டுத், திருச்சத்தி முற்றத்தை அடைந்து திருப்பதிகம் பாடினர். அப்போது நாயனர் சிவபெருமானை நோக்கி, 'ஆண்டவரே, அடியேன் முடிமேல் தேவரீர் திருவடிச் சுவடுகளைப் பொறித்தருள வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். சிவபெருமான், நல்லூருக்கு வருமாறு கட்டளை செய்ய, அங்ஙனமே நாயனரும் திருச்சத்திமுற்றத்தைத் தொழுதுகொண்டு திருநல்லூர் சேர்ந்து பெருமானை வணங்கினர். இறைவன் நாயனரை நோக்கி, 'நின் நினைப்பை முடிக்கின்ருேம்' என்று திருவாய் மலர்ந்து, தம் திருவடிச் சுவடுகளை அவர்மேல் பொறித்தருளினர். நாயனருக்கு உள்ளம் நிறைவடைந்தது. திருவருளை வியந்து திருத்தாண்டகம் பாடினர். திருநல்லூரில் சிலநாள் தொண்டு செய்யவும் விரும்பினர். அங்கிருக்கும்போது திருவாவூர் முதலான திருப்பதிகளுக்கும் சென்று தொழுது கொண்டு திருநல்லூருக்குத் திரும்புவார். இங்ஙனம் சில நாள் கழிந்தபின், வேறு திருப்பதிகளுக்குச் சென்று தொழவும் அவருக்கு வேட்கை எழுந்தது. ஒருநாள் புறப்பட்டுத் திருப்பழனம் வந்து தொழுதுகொண்டு, திங்களூர் வழியாக வழிக்கொண்டார்.

———

அ. அப்பூதியடிகள் தொண்டு

திங்களூரில் மறையவர் குலத்தில் **அப்பூதியடிகள்** என்பவர் ஒருவர் இருந்தார். அவர், குளம், கிணறு, தண்ணீர்ப் பந்தர், உண்டிச் சாலை முதலிய அற நிலையங்களை ஏற்படுத்தி வைத்திருந்தார். அவர் திருநாவுக்கரசு நாயனாரிடம் பேரன்பு உடையவர். ஆதலால், தண்ணீர்ப் பந்தர் முதலியவற்றையெல்லாம் திருநாவுக்கரசர் பெயராலேயே அமைத்திருந்தார். எல்லாரும் 'திருநாவுக்கரசு தண்ணீர்ப் பந்தர்' 'திருநாவுக்கரசு குளம்' என்றே அவற்றை வழங்குவர். அப்பூதியடிகள் தம் புதல்வர்களுக்கும் 'திருநாவுக்கரசு' என்னும் பெயரையே இட்டு அழைப்பது வழக்கம்.

வழியே வந்த திருநாவுக்கரசு நாயனார் திங்களூரை அணுகியதும், அப்பூதியடிகளின் அன்பின் திறமெல்லாம் தெரிந்துகொண்டார். தண்ணீர்ப் பந்தர் முதலியவற்றில் தம் பெயர் எழுதியிருப்பதை நேரில் பார்த்தார். அப்பூதியடிகளைப் பார்த்து, அளவளாவ வேண்டும் என்று அவருக்கு விருப்பம் எழுந்தது. நாயனார், அவர் இல்லத்துக்கு எழுந்தருளினார்.

அப்பூதியடிகள் திருநாவுக்கரசரை இதற்குமுன் பார்த்ததில்லை. ஆதலால், யாரோ சிவனடியார் வருகின்றார் என்று கருதி, முறைப்படி எதிர்கொண்டுவந்து திருநாவுக்கரசரின் திருவடிகளில் வணங்கி அவரை வரவேற்றார். 'தேவரீர் என் இல்லத்துக்கு எழுந்தருள என்ன தவம் செய்தேனோ' என்று கூறி மகிழ்ந்தார்.

அதற்கு நாயனார் உவந்து, 'நான் திருப்பழனத்திலிருந்து வருகிறேன். வழியில் நீங்கள் வைத்திருக்கும் தண்

ணீர்ப் பந்தரைப் பார்த்தேன். அதில் உங்கள் பெயர் எழுதியில்லை. வேறொரு பெயர் எழுதியிருக்கிறது. ஏன் அப்படி எழுதவேண்டும்' என்று கேட்டார். அதைக் கேட்டதும் அப்பூதியடிகளுக்கு வருத்தம் பொங்கியது. அவர் உள்ளம் கொதித்தது. திருநாவுக்கரசர் பெயரை 'வேறொரு பெயர்' என்று சொன்னது, அவருக்குப் பொறுக்க முடியவில்லை. அவர் திருநாவுக்கரசரை நோக்கி, 'ஆ, பல்லவனல் நேர்ந்த எல்லா இடையூறுகளிலும் தமது திருத்தொண்டின் உறைப்பினல் வெற்றிபெற்றவர் பெயரோ 'வேறொரு பெயர்'! திருநாவுக்கரசு நாயனர், கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலில் கரையேறினரே! அவர் பெருமையை அறியாதவர்களும் இருக்கின்றார் களோ! நீங்கள் சிவனடியாராயிருந்தும் இப்படிச் சொன் னீர்களே! இப்படிச் சொன்ன நீங்கள், யாரோ?' என்று சற்று ஆத்திரத்துடன் கேட்டார்.

திருநாவுக்கரசு நாயனர் அவர் அன்புக்கு உருகி, அவரைக் கனிவுடன் பார்த்து, 'நான், ஆண்டவன் அளித்த சூலைநோயின் வாயிலாகச் சமணசமயத்திலிருந்து சைவசமயத்துக்கு வந்த சிறியேன்' என்று சொல்லிக் கொண்டார். அப்பூதியடிகள் செவியில் அச் சொல் விழுந்ததும், அவர் திடுக்கிட்டுப்போனர். அவர்தாம் திரு நாவுக்கரசு நாயனரென்று தெரிந்ததும், அவருக்கு ஒன் றுமே தோன்றவில்லை. அவர் இரண்டு கைகளும் தலை மேல் விரைந்து குவிந்தன. கண்ணீர் வெள்ளம்போல் சொரிந்தது. மொழி குழறியது; மயிர் சிலிர்த்தது; உடம்பு பூரித்தது. தரையில் விழுந்து தாளும் தடக்கையும்

கூப்பி வணங்கினர். நாவுக்கரசருடைய திருவடிமலர்களைத் தமது தலையிலே சூடிக்கொண்டார். அதுகண்ட அப்பரும் மேன்மேல் கனிவு உடையவராய் அவரை எதிர் வணங்கி எடுத்தருளினர்.

அப்பூதியடிகளுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தம்மையும் அறியாமல் ஆடினர்; பாடினர். அங்கும் இங்கும் ஓடித் தம் மனைவி மக்களையும் மற்ற உறவினரையும் அழைத்துக்கொண்டு வந்து சொல்லரசரை வணங்கும்படி செய்தார். பின்பு, நாயனரை உள்ளே எழுந்தருளுவித்து, அவர் திருவடிகளை விளக்கி வழிபாடு செய்து, 'எளியேன் இல்லத்தில் தேவரீர் உணவுகொண்டு அருளவேண்டும்' என்று ஆர்வமாகவும் உரிமையாகவும் வேண்டிக்கொண்டார். அப்பர், அத்தனை அன்பர்க்கு எதிர் மொழிதல் கூடுமா? உடனே அன்போடு இசைந்துகொண்டார். அப்பூதியடிகளின் மனைவியார், கூடிய விரைவில், உயர்தரமான நறுஞ்சுவை யுணவுகள் சமைத்து முடித்தார்.

சமையல் ஆனதும், அப்பூதியடிகள் தம் மூத்த புதல்வனை அழைத்து, 'நீ வாழைத் தோட்டத்துக்குப்போய் ஒரு நல்ல தலைவாழையிலை அரிந்துகொண்டு வா' என்று சொல்லியனுப்பினர். அப் புதல்வன் பெயர், மூத்த திருநாவுக்கரசு. அவன் ஆரா மகிழ்ச்சியோடு தோட்டத்துக்கு ஓடினன். ஓடி, ஒரு நல்ல வாழைக்குருத்தை அரியும்போது, அவனை ஒரு நச்சுப்பாம்பு தீண்டிவிட்டது. பாம்பு கையிலும் சுற்றிக்கொண்டது.

மூத்த திருநாவுக்கரசு கூர்மையான அறிவும் உயர்ந்த நற்குணமும் உடையவன். அதனல் அவன், 'ஐயோ

நாயனர் திருவுணவுகொள்வதற்கு இது தடையாய்விட்டதே' என்று நினைத்தான். உடனே பாம்பை உதறினன். குருத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு ஓட்டமாய் ஓடிவந்தான். இதற்குள் நஞ்சு தலைக்கு ஏறிவிட்டது. சிறுவனல் தாங்கக்கூடவில்லை. வாழைக்குருத்தைத் தன் தாயார் கையில் கொடுத்துவிட்டு அப்படியே கீழே சாய்ந்து விட்டான். அவன் உயிர் நீங்கிவிட்டது. பெற்றோர்களுக்கு மனம் திடுக்கிட்டது. 'ஐயோ, ஈதென்னகுறை; நாயனருக்குத் தெரிந்தால் திருவுணவுகொள்ளமாட்டாரே' என்று எண்ணி அவர்கள் மனம் வருந்தியது.

பின்பு, நாயனர் உணவு செய்துகொள்வது முதலில் ஆகட்டும் என்று கருதிப், புதல்வனை ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டு, அப்பூதியடிகள் நாயனரிடம் போய் அவரைத் திருவுணவு செய்ய எழுந்தருளும்படி வேண்டிக்கொண்டார். நாயனரும் விருப்பத்தோடு வந்து அமர்ந்தார். உணவு வகைகள் பறிமாறப்பட்டன. அப்பூதியடிகளும் அவர் வாழ்க்கைத் துணைவியாரும் புதல்வன் இறந்த குறிப்புச் சிறிதுந் தெரியாதபடி, விழிப்பாய் முக மலர்ச்சியோடு நடந்து கொண்டார்கள். நாயனர் உண்பதற்குத் தொடங்குமுன் எல்லாருக்கும் திருநீறு வழங்கினர். அப்போது மூத்த திருநாவுக்கரசு காணப்படவில்லை. நாயனர், 'மூத்த திருநாவுக்கரசைக் காணேமே; அப் பிள்ளையை அழைத்து வாருங்கள்' என்று அப்பூதியடிகளை நோக்கிச் சொன்னர்.

அப்பூதியடிகளுக்கு நெஞ்சம் திடுக்கிட்டது. அவர் ஒருவாறு துணிவு செய்துகொண்டு, 'மூத்த திருநாவுக்கரசு இப்போது உதவான்' என்று சொன்னர். அச் சொல்லில்

ஏதோ குறிப்பிருக்கிறது என்று நாயனருக்குத் தோன்றியது. அவர், உண்மையை அறிய விரும்பவே, அப்பூதியடிகளும் வேறு வழியின்றி, நடந்த செய்தியை அச்சத்துடன் கூறினர். நாயனருக்கும் உளம் திடுக்கிட்டது. 'இப்படியும் ஓர் அன்புண்டா! இப்படிச் செய்தார் யார்?' என்று நினைத்தும் வியப்படைந்தார். உடனே சவத்தைத் திருக்கோயிலின்முன் கொண்டுவரச்செய்து, பெருமானை நோக்கித் தேவாரம் பாடி, அனைவரும் வியக்கும்படி அப்பிள்ளையை உயிர்பெற்றெழும்படி செய்தார்.

பிறகு எல்லாரும் வீட்டுக்கு வந்தார்கள். நாயனர் இன்னும் உணவு செய்யாமலிருக்கிருரே என்று அப்பூதியடிகளுக்கும் அவர் மனைவியாருக்கும் நினைவாயிருந்தது. நாயனர் மூத்த திருநாவுக்கரசுக்கும் திருநீறு வழங்கியருளி, எல்லாரோடும் ஒருங்கமர்ந்து உணவு செய்தருளினர். அப்பூதியடிகள் நெஞ்சம் குளிர்ந்தது. நாயனர் அவர் அன்புக்காகச் சிலநாள் அங்கே தங்கிப், பின் அங்குநின்றும் புறப்பட்டுத் திருப்பழனத்துக்கு எழுந்தருளினர். அங்குச் சென்றபின்னும், இறைவன் திருவருளை நினைந்து வியந்தபோது, அப்பூதியடிகளது பேரன்பையும் நினைத்து, அவர் திருத்தொண்டைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினர்.

கூ. திருக்கோயில் வழிபாடு

அதன்பின் அப்பர் திருச்சோற்றுத்துறை முதலான திருப்பதிகளை வணங்கிக்கொண்டு திருவாரூருக்கு வந்தார். அங்கே, நமிநந்தியடிகள் என்னும் நாயனர் ஒருவர் ஒரு நேரத்தில் தண்ணீரினல் ஆண்டவனுக்குத் திருவிளக் கேற்றினர். அப்பர் பெருமான் அதனை நினைவாகப் புகழ்ந்து திருப்பதிகம் ஓதி, அங்கே நடந்த திருவாதிரைத் திருவிழாவையும் கண்குளிரக் கண்டு, பின்பு திருப்புகலூருக் குப் புறப்பட்டார்.

திருப்புகலூரில் **முருகநாயனர்** இயற்றிய திருமடம் ஒன்று உண்டு. அத் திருமடத்தில் அப்போது திருஞான சம்பந்தப் பிள்ளையார் எழுந்தருளியிருந்தார். அவர், திரு நாவுக்கரசு நாயனர் வருவது தெரிந்து, அடியார் குழாத் துடன் எதிர்கொண்டு போய் வரவேற்றார். அப்பர் ஞான சம்பந்தரை வணங்கி அளவளாவித், தாம் திருவாரூரில் கண்ட திருவாதிரைத் திருவிழாவைப்பற்றிப் பெருமையாகச் சொல்லப், பிள்ளையாருக்குத் திருவாரூர் செல்லும் வேட்கை எழுந்தது. அதனல், அவர் திருவாரூருக்கு எழுந்தருளினர். அப்பர், திருப்புகலூர்ப் பெருமானை வணங்கி அங்கே தங்கி, அப்படியே அருகிலுள்ள திருச்செங்காட்டங்குடி முதலான திருப்பதிகளையும் தொழுதுகொண்டிருந்தார். இதற்குள், திருவாரூருக்குச் சென்றிருந்த திருஞானசம்பந்தரும் திருப் புகலூருக்குத் திரும்பிவர, அப்பரும் சம்பந்தரும் பேரன்பி னல் மனமுருகி அளவளாவிக்கொண்டு, அத் திருப்பதியில், முருக நாயனர் திருமடத்திலேயே சில நாட்கள் தங்கியிருந் தார்கள். அப்போது, **சிறுத்தொண்ட நாயனர்**, **திருநீலநக்க**

நாயனூர் முதலிய பெருமக்களும் அங்கிருந்து, மனங்கலந்து பழகிக்கொண்டிருந்தனர்.

ஒருநாள் அப்பரும் சம்பந்தரும், தாம் இருவருமாகத் திருப்பதிகளுக்குச் சென்று வணங்க விரும்பி, எல்லாரோடும் விடைபெற்றுக்கொண்டு, திருக்கடவூரை அடைந்தனர். அங்கே, **குங்குலியக்கலய நாயனூர்** அழைப்புக்கு இணங்கி அவர் திருமடத்தில் தங்கி உணவு செய்து கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு வழியில் பல திருப்பதிகளை வணங்கிக்கொண்டு, திருவீழிமிழலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அங்கே மழையில்லாமையால், கருப்பு உண்டாயிற்று. உணவுப் பொருள்கள் கிடைப்பது அருமையாயிருந்தது. நாயன்மார் இருவரோடு அடியார்களும் திரண்டு வந்திருக்கிறூர்கள். எல்லாருக்கும் உணவு வேண்டும். ஒருநாள் இரவு சிவபெருமான், அப்பர் சம்பந்தர் இருவருக்கும் கனவில் எழுந்தருளி, ‘உங்கள் செலவுக்குப் படிக்காசு தருகின்றோம்’ என்று அருளிச்செய்தார். அன்றுமுதல், திருக்கோயிலின் கிழக்குப்படியில் ஒரு படிக்காசும் மேற்குப்படியில் ஒரு படிக்காசும் வைக்கப்பட்டிருந்தன. கிழக்குப் படியில் உள்ளதை ஞானசம்பந்தர் எடுத்துக்கொள்வார். மேற்குப்படியில் உள்ளதை நாவுக்கரசர் எடுத்துக்கொள்வார். இருவருக்கும் செலவுக்கு முட்டுப்பாடில்லாமல் இருந்தது. அப்பர் எடுக்கும் படிக்காசு மட்டும் வட்டமில்லாமல் மாற்றப்பட்டு வந்தது. சம்பந்தர் எடுக்கும் படிக்காசுக்கு வாசி உண்டு. பின்பு சில நாட்களில், நல்ல மழை பெய்து ஊரும் செழித்தது.

அதன்மேல் அப்பரும் சம்பந்தரும், இடையே பல திருப்பதிகளைத் தொழுதுகொண்டு திருமறைக்காட்டுக்கு எழுந்தருளினர். அது, முன்னொருகால் திருமறைகள் இறைவனை வழிபாடு செய்து திருக்காப்புச் செய்த இடம். அத் திருக்கோயிலில், அடியார்கள் வேறு வழியாகச் சென்று இறைவனைத் தொழுது திரும்புவது வழக்கம். அப்பரும் ஞானசம்பந்தரும் உரிய வழியாகவே திறந்துசெல்ல விரும்பினர். அப்போது ஞானசம்பந்தர் அப்பரை நோக்கி, 'அப்பரே, இத் திருக்கதவம் திறக்கும்படி நீங்கள் திருப்பதிகம் பாடவேண்டும்' என்று கூற, அவரும் அதற்கிசைந்து பதிகம் பாடினர். கதவு திறந்தது. ஆனல், சிறிது, காலம் தாழ்த்துத் திறந்தது. அடியார்கள் ஆரவாரஞ் செய்ய, இருவரும் உட்சென்று பெருமானை உள்ளமுருகித் தொழுது வெளிவந்தனர். அப்போது அப்பர் பெருமான் ஞானசம்பந்தரைப் பார்த்துத், 'தேவரீர் இத் திருக்கதவம் அடைக்கும்படி பாடியருளுங்கள்' என்று வேண்ட, அவரும் அதற்கிணங்கிப் பாடியருளினர். கதவம் அடைக்கப்பட்டது; அதுவும், காலம் தாழாமல் உடனே அடைக்கப்பட்டது. அடியார்கள் அனைவரும் இவ்வருஞ் செயல் கண்டு நெக்குருகினர். அன்றுமுதல் அத் திருக்கதவம் திறக்கவும் அடைக்கவும் வழக்கமாயிற்று.

நாயன்மார் இருவரும் திருமடத்தை அடைந்தனர். திருநாவுக்கரசு நாயனர், 'நாம் திறக்கப் பாடியபோது கதவு காலங் கடந்து திறந்தது; திருஞானசம்பந்தர் அடைக்கப் பாடியபோது மட்டும் உடனே அடைத்துக்கொண்டதே; இதற்குக் காரணம் என்னவோ?' என்று கருதி அஞ்சி

உளம் கவன்றார். அதனால் அன்றிரவு, அவர், மறைக்காட்டிறைவனை மனத்துட்கொண்டு, மடத்தில் ஒரு பக்கமாகப் போய்த் தனியாய் உறங்கினர். அன்று அவர் கனவில் இறைவன் எழுந்தருளி, 'என்னுடன் நீ வாய்மூருக்கு வா' என்று ஆணை தந்து முன்னே சென்றார். அப்பர் திடுக்கிட்டெழுந்து, ஒன்றும் தோன்றாதவராய்ப், பெருமானுடன் அவர் பின்சென்றார். சிறிது தொலைவு போனதும் கடவுள் அவர் கண்ணுக்குத் தெரியவில்லை. இதற்குள், ஞானசம்பந்தரும் அப்பர்செய்தி தெரிந்து அங்கு வந்து சேர்ந்தார்.

அப்போது அப்பர் சற்று வருத்தக் குறிப்புடன் இறைவனை நினைந்து, 'ஞானசம்பந்தர்தாம் திறக்கப் பாட வேண்டும் என்பது கருதாமல் திருப்பதிகம் பாடிய ஏழையேனுக்குத், தேவரீர் ஒளிப்பது பொருந்தும்; ஆனால், உடனே அடைக்கும்படி திருப்பதிகம் பாடிய ஞானசம்பந்தருக்கும் ஒளிக்கலாமா? அவர் இதோ இருக்கிறாரே' என்று உருக்கமாகக் கூறினர். சிவபெருமான் உடனே ஞானசம்பந்தருக்குக் காட்சி கொடுத்தருள, ஞானசம்பந்தர் அத்திருக்கோலத்தைக் கண் குளிரக் கண்டு அப்பருக்குங் காட்டினர். பின் இருவரும் வாய்மூர் சென்று தொழுது திருமறைக்காடு மீண்டு, அங்கே தங்கியிருந்தனர்.

அக்காலத்தில், பாண்டி நாட்டிலும் சமண சமயம் மிகப் பரவியிருந்தது. இந் நிலைமையை ஞானசம்பந்தருக்குத் தெரிவிக்கும்படி, அங்கிருந்து சைவ அன்பர்கள் ஆள் அனுப்பி யிருந்தனர். ஞானசம்பந்தர் அது கேட்டதும், அங்கே எழுந்தருள விரும்பினர். சைவ சமயத்தையும் திருநீற்றையும் முன்போல் நிலைநிறுத்த வேண்டும் என்பது

அவர் கருத்து. திருநாவுக்கரசர்க்கு இது சற்று அச்சம் விளைத்தது. தாம் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்துக்கு வந்தபோது உண்டான இடர்கள், அவர் நினைவுக்கு வந்தன. புறப்படும் நாள் நல்ல நாள் அன்று என்பதும் அவர் எண்ணம். அதனால் அவர், ஞானசம்பந்தரைத் தடுத்தார்.

அப்போது பிள்ளையார் அப்பரை நோக்கி, 'இறைவன் திருவருளிருக்கும்போது நமக்கு ஒன்றும் குறைவில்லை; அடியார்களுக்கு நாளும்கோளும் இடர் செய்யா' என்று சொல்லி,

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
உளமேபுகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன் வியாழம்வெள்ளி
சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே"

என்று திருப்பதிகம் ஓதினார். ஓதி, உடனே பாண்டி நாட்டுக்கு எழுந்தருளினார்.

திருநாவுக்கரசு நாயனார் பின்பு திருநாகைக்காரோணம் முதலான திருப்பதிகளை வணங்கிக்கொண்டு திருவாவடுதுறையை அடைந்து, அங்கே ஞானசம்பந்தர் ஒரு திருப்பதிகம் பாடி ஆயிரம் பொன் பெற்ற திறத்தைப் புகழ்ந்து, பாடினார். அங்கிருந்து திருப்பழையாறு என்னும் திருப்பதிக்குச் சென்றார்.

அங்கே 'வடதளி' என்று ஒரு திருக்கோயில் உண்டு. அத் திருக்கோயிலில் உள்ள சிவலிங்க உருவைச் சமணசமயத்தார் மறைத்துவைத்திருந்தார்கள். அதைக் கேள்வியுற்றதும், நாவுக்கரசர் மனம் நொந்து, இறைவனை நினைந்து, 'பெருமானே, தேவரீர் திருவுருவத்தைக் கண்டு வணங்கியபிறகுதான் அடியேன் உணவுகொள்ளவேண்டும்!' என்று உறுதி சொல்லிக்கொண்டு ஓரிடத்தில் இருந்தார். அன்றிரவு இறைவன் அரசன் கனவிற்சென்று 'சமணர்கள் என்னை மறைத்திருக்கிறார்கள்; திருநாவுக்கரசன் என்னைக் கண்டு வணங்கக் கருதியிருக்கிறான்; ஆதலால், நீ என் உருவை வெளிப்படுத்தவேண்டும்' என்று அருளிச்செய்ய, அரசன் பேரன்போடும் பேரச்சத்தோடும் விழித்தெழுந்து அவ்வாறே திருப்பணிசெய்து, நாவுக்கரசரை வந்து வணங்கினான். நாவுக்கரசர் கரைகடந்த மகிழ்ச்சியுடையராய்த் திருக்கோயில் போந்து, பெருமானைத் தொழுது மனமுருகித் திருப்பதிகம் ஓதினார்.

பின், திருச்சிராப்பள்ளி முதலான திருப்பதிகளை வணங்கிக்கொண்டு திருப்பைஞ்ஞீலி நோக்கிச் சென்றார். வழியில் ஓர் அருஞ்செயல் நிகழ்ந்தது. நாயனாருக்குப் பசியும் நீர்வேட்கையும் மிக்கு, இளைப்பும் களைப்பும் உண்டாயின. நடக்க முடியவில்லை. வெயில் நேரம். வழியோ நீரும் நிழலும் இல்லாத காட்டுவழி. ஆயினும், மனம் தளராமல் அவர் நடந்துகொண்டிருந்தார். இறைவனுக்கே உள்ளம் தாளவில்லை. நாயனார் மெய்யன்புக்கு வியந்து, அவர் வருத்தத்தைத் தீர்க்கத் திருவுளங்கொண்டு, பெருமான் ஒரு குளிர்ந்த சோலையை வழியில் உண்டாக்கினார். தெளி

நீர்க் குளம் ஒன்று தோற்றுவித்தார். கையில் சிறிது கட்டமுது எடுத்துக்கொண்டு, மறையவர் கோலத்துடன் அங்கு வந்து அமர்ந்துகொண்டிருந்தார். நாயனுர், சோலை யும் குளமும் கண்டு அகம் மகிழ்ந்து அங்கே செல்ல, இறை வன் அவரை நோக்கி, 'ஐயா பெரியவரே, நீங்கள் வழி நடந்து மிகவும் களைத்துப்போயிருக்கிறீர்கள். என்னிடம் பொதிசோறு இருக்கிறது; அதனை உண்டு இவ் வாவிநீர் பருகி இளைப்பாறவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். இது நாயனுருக்கு எவ்வளவு உதவி! அவ்வாறே அவர் விருப்பம்போல, அவ்வருளமுது உண்டு நீர் பருகிக் களை தீர்ந்தார். சோறும் நீரும் நாயனுருக்கு மிக இனித்தன.

இளைப்பாறிய பின் இறைவன், 'ஐயா, நீங்கள் எங்கே போகிறீர்கள்' என்று அப்பரை அன்போடு உசாவ, அவ ரும் தாம் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும் உண்மையை ஆர்வத்தோடு சொன்னுர். அது கேட்டு இறைவன் மகிழ்ந்த வர்போல் முகம் திருத்தி, 'ஓ, நானும் அங்கேதான் போகி றேன்; வாருங்கள்' என்று சொல்லி எழுந்தார். திருப் பைஞ்ஞீலிக்கு அருகில் வந்ததும், இறைவன் மறைந்துவிட் டார். அப்போதுதான் அவர் ஆண்டவர் என்று அப் பருக்குத் தெரிந்தது. அவர் செய்த பேருதவியை நினைந்து நினைந்து, அப்பர் உள்ளம் நெக்குருகியது. அவர் அவ்வுருக் கம் தோன்றத், திருப்பைஞ்ஞீலியை நண்ணிப் பெருமானைத் தொழுது திருப்பதிகம் பாடினுர். திருப் பைஞ்ஞீலியின் பெரு மானை விட்டுப் பிரிய நாயனுருக்கு உள்ளம் எழவில்லை. சில நாட்கள் அங்கே இருக்க விரும்பி, வழக்கம்போல உழவாரத் தொண்டு செய்துகொண்டு அங்கே தங்கினுர்.

பின் ஒரு நாள் அங்கிருந்து புறப்பட்டுத் **திருவண்ணு மலைக்குச்** சென்று,

"பைம்பொனே பவளக் குன்றே பரமனே பால்வெண் ணீறு
செம்பொனே மலர்செய் பாதா சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து வீழும் அணிஅணு மலையு ளானே
என்பொனே உன்னை யல்லால் ஏதும்நான் நினைவி லேனே"

என்று பதிகம்பாடி ஆண்டவனைத் தொழுதுகொண்டு தொண்டை நாட்டை அடைந்தார். அந் நாட்டில் திருவேகம்பம், திருக்கழுக்குன்றம், திருவொற்றியூர், திருவாலங்காடு முதலான திருப்பதிகளை வணங்கிக்கொண்டு **திருக்காளத்தி** மலையை எய்தினர். அங்கே பொன்முகலி யாற்றில் தலை முழுகிப் பெருமானை வழுத்தினர். பெருமானுக்கு வலப்பக்கத்தில் நிற்கும் பேறுபெற்ற **கண்ணப்ப நாயனரைக்** கண் குளிரக் கண்டு, அவர் அன்பின் திறத்தில் உள்ளம் உருகி, ஆராத காதலுடன் அவர் திருவடிகளை வணங்கினர்.

൰. திருக்கயிலைக் காட்சி

திருக்காளத்தி மலையைத் தென்கயிலை என்று சொல் வார்கள். அப்பர் இத் தென்கயிலையை அடைந்ததும், அவருக்கு வட கயிலையின் நினைவு எழுந்தது. அங்குச் செல்வதில் மேலுமேலும் ஆவல் பெருகிற்று. துணிந்து புறப்பட்டார்.

வடகயிலை மிகவும் தொலைவில் உள்ளது. அப்பரோ மிகவும் மூத்துத் தள்ளாதவராக இருக்கிறார். என்றாலும், அவருக்கு உள்ளம் தளரவில்லை. அவருக்கு இறைவன்பால் உள்ள அன்பு அப்படிப்பட்டது. கயிலைமலையின் திருக் கோலம் அவர் கண்களிலேயே இருந்தது. வடக்கே உள்ள திருப்பருப்பதம் காசி முதலான திருப்பதிகளை அடைந்து வணங்கிக்கொண்டு, மேலும் நடந்தார். வடமலையின் அடி வாரம் காணப்பட்டது. அந்த இடம் கல்சுரமாயிருந்தது. செடி கொடிகள் மிகுதியாக இல்லை. அப்பருக்கு உணவு கிடைப்பதும் அரிதாயிற்று. அத்தகைய பரட்டு நிலத்தில் நாயனார் நீண்ட வழி நடந்தார். அவர் திருவடிகள் பரடு வரையில் தேய்ந்துவிட்டன. உணவும் பருகுநீரும் இல்லாமல் காலடிகள் தேய்ந்துங்கூட, அவருக்கு வடகயிலையின் ஆவல் குறையவில்லை. இரண்டு கைகளையும் நிலத்தில் ஊன்றித் தாவித் தாவிச் சென்றார். கைகளும் தசை குழம்பின. மணிக்கட்டுகள் அசைந்து கரைந்தன.

அதற்குமேல், கத்திபோல் குத்திக் கிழிக்கும் கூர் பொருந்திய பருக்கைக் கற்கள், நிலத்தில் புதைந்து நிரம்பிக் கிடந்தன. அப்பர் அக்கொடிய வழியில் மார்பினால் நகர்ந்து

போனர். மார்பின் தசைகள் நைந்து சிந்தின. பின், புரண்டு புரண்டு போனர். எலும்புகள் முறிந்தன. உடம்பே அரைந்துபோயிற்று. இருந்தும், வடகயிலைக் காட்சியின் பேரன்பினுல் மெல்ல நகரப் பார்த்தார். இயலவில்லை; உள்ளம் விரைந்தும், ஒன்றும் செய்யமாட்டாமல் வழியில், கிடந்தபடியே இருந்தார். ஆ, அவரால் இன்னுந்தான் என்ன செய்யமுடியும்!

இந்நிலை வந்தபின்னும் ஆண்டவன் சும்மா இருந்து என்ன பயன்? அவர் அங்கே ஒரு குளத்தை ஏற்படுத்தி வைத்து, ஒரு முனிவர் வடிவத்தோடு நாயனருக்கு எதிரே எழுந்தருளினர். எழுந்தருளி, நாயனரைப் பார்த்து, 'நீங்கள் உடம்பு தேயும்படி எங்கே போகிறீர்கள்' என்று கடைக் கணித்துக் கேட்டார். முனிவர் மரவுரி ஆடை உடுத்திருந் தார்; சடைமுடி பூண்டிருந்தார். உடம்பெங்கும் வெளே ரென்று நீறு பூசியிருந்தது. அவ்வருட்கோலத்தைக் கண் டதும் நாயனர்க்குச், சிறிது பேசும்வன்மை வந்தது. வரவே, நாயனர் முனிவரை நோக்கி, 'நம் சிவபெருமான் வட திருக்கயிலையில் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் காண, அடியேன் விரும்பி வந்தேன்' என்று தெரிவித்தார்.

அதற்கு முனிவர், 'திருக்கயிலைக் காட்சி என்பது எளிதன்று; அது தேவர்களாலும் காணமுடியாதது. மக்க ளாய்ப் பிறந்தவர்கள் அதனை எப்படிக் காணமுடியும்? கொடுஞ்சுரத்தில் நெடுவழி வந்துவிட்டீர்களே; நீங்கள் திரும்புவதே நல்லது' என்று இரக்கத்துடன் கூறினர். அப்போதும் அப்பர் நெஞ்சம் பின்வாங்கவில்லை. 'திருக் கயிலைக் கோலம் கண்டல்லது, இந் நிலையா உடம்புடன்

திரும்புவதில்லை' என்று உறுதியாகக் கூறிவிட்டார். என்ன மனவுறுதி !

இறைவன் அவர் துணிவுகண்டு மகிழ்ந்து, முனிவர் திருவுருக் கரந்து வான்குரல் வழியாய், 'நாவுக்கரசனே எழுந்திரு' என்று அருளிச்செய்தார். நாயனருக்கு முன் கரைந்த உடலுறுப்புகள் நிரம்பி நின்றன. ஏதோர் ஊன முமின்றி நாயனர் எழுந்து, பெருமான் திருவருளுக்கு வியந்து, 'தேவரீர் திருக்கயிலை மலையில் வீற்றிருக்கின்ற படியை ஏழையேன் கண்டு வணங்கும்படி அருள்செய்ய வேண்டும்' என்று உருகி வேண்டிக்கொண்டார். அப் பொழுது சிவபெருமான், 'நீ இத் திருக்குளத்தில் முழுகித் திருவையாறு அடைந்து, நான் திருக்கயிலைமலையில் வீற் றிருக்கின்ற முறைமையிலேயே என்னை அங்கே கண்டு கொள்' என்று கூறினர்.

அப்பர் இறைவன் கட்டளையைத், தலைமேற்கொண்டு, திருவைந்தெழுத்து ஓதிக் குளத்தில் முழுகினர். உடனே திரு வையாற்றில் ஒரு குளத்திலிருந்து எழுந்தார். திருக்கோயில் நோக்கி மிக்க ஆவலுடன் வந்தார். வழியில் எதிரே தோன் றுவனவெல்லாம் ஆணும் பெண்ணுமாக இணைந்து விளங் கின. அவருக்கு அது மங்கலமான தோற்றமாயிருந்தது. அவற்றையெல்லாம் நாயனர் அம்மையப்பராகவே கண்டு வணங்கிக்கொண்டு, திருக்கோயில் நண்ணினர்.

அத் திருக்கோயில் திருக்கயிலை மலையாகவே விளங் கியது. அதனிடத்தில், எல்லாம் வல்ல சிவபெருமான் ஓர் அழகிய இருக்கையில், உமையம்மைபாகராக வீற்றிருந் தார். திருநான்மறைகளும் சிவ அறிவு நூல்களும் ஆண்ட

வனுக்கு இருபக்கங்களிலும் இருந்து வாழ்த்துக் கூறின. தும்புரு, நாரதர் என்னும் இருவரும் யாழ் இசைத்தனர். திருமாலும் நான்முகனும் அடக்கமாக ஒதுங்கி நின்று, தம் குறைகளைப்பெருமானிடம் முறையிட்டுக்கொண்டிருந்தனர். பூதவினங்கள் வாயில்கடோறும் நின்று காவல்செய்தன. தேவர், சித்தர், அசுரர், சாரணர், கந்தருவர், கின்னரர், இயக்கர், விஞ்சையர், மாதவர், முனிவர் முதலியவர்களெல் லாரும் அவரவரிடங்களில் வணங்கிநின்று, வழுத்துரை கூறிக்கொண்டிருந்தனர். அரம்பையர் இசைபாடினர். திரு நந்திதேவர் கையிற் பிரம்புகொண்டு பணிசெய்து நின்றார்.

இத்தகைய அரிய திருக்கயிலைத் திருக்கோலம் அப் பரடிகள்முன் தோன்றின அளவில், அவர் உள்ளம் எப் படியிருக்கும்! அது சொல்லத் தரமன்று; அவரை அறியா மலே அவர் கைகள் தலைமேல் ஏற, மயிர் சிலிர்க்க, உடம்பு புளகிக்க, அவர் கண்களில் இன்பப் பெருநீர் கரைகடந்து பெருகிற்று. நாயனாருக்கு மொழி தடுமாறிற்று; இன்பக் கூத்தாடினர். திருக்கயிலைக் காட்சியைத் தம் இருகண்களா லும் ஆரப் பருகினர். இங்ஙனம் இவர் அக் காட்சிப்பேரின் பத்திற் படிந்து வணங்கியதும், இறைவன் அக்காட்சியோடு உருக்கரந்தருளினர். அப்பர் உள்ளம், ஆராமையால் வாடி யது; பின் ஒருவாறு தெளிந்து, தாம் திருக்கோயிலுக்கு வருமுன் கண்ட தோற்றங்களெல்லாம் நினைந்து அவர்,

“மாதர்ப் பிறைக்கண் ணியானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்

யாதும் சுவடுப் டாமல்
ஐயாற டைகின்ற போது
காதன் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்;
கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்.

வளர்மதிக் கண்ணியி னானை
வார்குழ லாளொடும் பாடிக்
களவுப டாததோர் காலம்
காண்பான் கடைக்கணிக் கின்றேன்
அளவுப டாததோர் அன்போ
டையா றடைகின்ற போது
இளமண நாகு தழுவி
ஏறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்"

என்று தேனும் பலாச்சுளையும் தித்திப்பதுபோல இனித்த தேவாரச் செந்தமிழ்ப் பாட்டுகளை அகமுருகிப் பாடிப், பின்னும் பலப்பல திருப்பதிகங்கள் திருவாய்மலர்ந்துகொண்டு, அத்திருப்பதியை விட்டு விரைவில் பிரிய மனம் வராமல் அவ்விடமே தங்கியிருந்தார்.

கக. அப்பர் திருமடம்

சிலநாள் கழிந்தபின், நாயனர், திருவையாற்றிலிருந்து புறப்பட்டு மழபாடி முதலிய திருப்பதிகளைத் தொழுது கொண்டு, திருப்பூந்துருத்தியைச் சேர்ந்தார். அங்கே அவர் பல நாட்கள் தங்கியிருந்தார். அங்கே எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை நாடோறும் கண்டு வணங்கிப், பலப்பல தேவாரங்கள் பாடினர். திருப்பூந்துருத்தி அப்பருக்கு ஒரு வசதியான இடமாகத் தோன்றிற்று. அதனல் அங்கே அவர் ஒரு திருமடம் அமைப்பதற்குத் திருவுளங்கொண்டார். அது தெரிந்ததும் ஆண்டிருந்த அன்பர்கள் உடனே ஒரு திருமடம் அமைத்து முடித்தனர். நாயனர் அத் திருமடத்தில் எழுந்தருளி, இறைவனைத் தொழுது அகம் உருகுவதும், செந்தமிழ்த் திருப்பதிகங்கள் பாடிச் சிவம் பரப்புவதுமாய் விளங்கியிருந்தார்கள்.

அப்பர் இங்ஙனந் திகழும்போது, பாண்டி நாட்டுக்குச் சென்ற திருஞானசம்பந்தப் பிள்ளையார் தெய்வத் திருவருளால் அங்கே சமண் சமயத்தை வென்று சைவமும் திருநீறும் தழைக்க அருள்செய்து, அங்கிருந்து திரும்பினர். அப்பர் திருப்பூந்துருத்தியில் இருப்பது அவர்க்குத் தெரிந்தது. தெரிதலும், உடனே அவரைக் காணும் பேராவல் மிக்கவராய்ப் பிள்ளையார், வழக்கம்போல முத்துப் பல்லக்கில் எழுந்தருளிவந்தார். ஞானசம்பந்தர் வருகின்றாரென்பது தெரிந்ததும், அப்பர் களிதுளும்பும் உள்ளத்துடன் திருப்பூந்துருத்தியின் எல்லைக்கு விரைந்தார். அங்கே அவருக்குப், பிள்ளையார் எழுந்தருளி வருகின்ற திருச் சின்னத்தின் ஒலி கேட்டது.

நாவுக்கரசர் உடனே எதிரில் விரைந்து போய்ப், பிள்ளையார் அறியுமுன் அடியார் குழாத்துள் கலந்து நுழைந்து, அவர் எழுந்தருளி வரும் முத்துச் சிவிகையைத் தமது தோளில் தாங்கிச் சுமந்து வந்தார். இதனை யாரும் தெரிந்துகொள்ளவில்லை. பல்லக்குத் திருப்பூந்துருத்திக்கு அருகில் வந்ததும், 'அப்பர் எங்கிருக்கிறார்?' என்று ஞான சம்பந்தர் அங்கிருந்தவர்களைக் கேட்டார். உடனே அப்பர் பெருமான் பிள்ளையாரை நோக்கி, 'அடியேன் தேவரீரைத் தாங்கிவரும் பெருவாழ்வு பெற்று இங்கிருக்கிறேன்' என்று விடைகூறினர். அது கேட்டதும் திருஞானசம்பந்தர் நெஞ்சம் பதைத்துக் கீழிறங்கி அப்பரை வணங்க, அவர் வணங்கு முன் அப்பர் தாமும் வணங்க, இங்ஙனம் இருவரும் மனம் உருகி அளவளாவி நின்றனர். அதுகண்ட அடியார்களெல்லாரும் நெஞ்சம் திடுக்கிட்டு வியந்து, நாயன்மாரிருவரையும் தொழுது பேராரவாரம் செய்து மகிழ்ந்தனர்.

பின்பு, அனைவரும் திருப்பூந்துருத்தி வந்து சேர்ந்தனர். திருக்கோயில் வழிபாடு ஆனபின், ஞானசம்பந்தரை அப்பர் தம் திருமடத்துக்கு ஆராப் பெருங் காதலுடன் அழைத்து வந்தார். பிள்ளையார் மிக்க விருப்பத்தோடு அங்கே சில நாட்கள் எழுந்தருளியிருந்தார்.

அப்போது ஞானசம்பந்தர் தாம் பாண்டி நாட்டுக்குச் சென்று சைவமும் திருநீறும் தழைக்கச் செய்துவந்த செய்தியையும், மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் என்னும் அன்பர்களின் பெருமையையும் சொல்ல, அப்பரும் தாம் தொண்டைநாட்டுக்குச் சென்றுவந்த வரலாறுகளைச் சொன்னர். இப்படி இருவரும் கலந்து பேசிக்கொண்ட

தன் பயனுகத், திருஞானசம்பந்தர் தொண்டைநாடு காணும் ஆவல் மிக்குச் செல்ல, அப்பரும் அவர் சென்றபின், பாண்டிநாடு தொழும் வேட்கை மிக்குப் புறப்பட்டார்.

அப்பர் மதுரையை அணுகியபோது, மங்கையர்க்கரசி யாரும் பாண்டியனும் குலச்சிறையாரும் நாயனுரைப் பேரன்போடு வரவேற்று மகிழ்ந்தனர். நாயனுர் அவர்கள் அன்புக்கு உவந்து மதுரையம்பெருமானை வணங்கிக் கொண்டு, அங்கே சில பகல் எழுந்தருளியிருந்தார்.

"சீர்திகழும் பாண்டிமா தேவியார் திருநீற்றின்
சார்வுடைய கூன்நிமிர்ந்த தென்னவனுர் தம்முடனே
பார்பரவுங் குலச்சிறையார் வாகீசர் தமைப்பணிவுற்
ருரகிலாக் காதல்மிக அடிபோற்ற அங்கிருந்தார்"

பின் இராமேச்சுரம் திருநெல்வேலி முதலிய திருப் பதிகளைத் தொழுது, சோழநாட்டுக்குத் திரும்பித், திருப்புக லூர் என்னும் திருப்பதியை அடைந்தார்.

கஉ. திருவடிப் பேறு

திருநாவுக்கரசு நாயனர் திருப்புகலூரில் நாடோறும் திருக்கோயில் வழிபாடு செய்துவந்தார். பலவகையான தேவாரத் திருப்பதிகங்கள் பாடியருளினர். அப்பர், திருத் தாண்டகங்கள் பாடுவதில் மிக வல்லவர். அதனல் அவருக் குத் **'தாண்டகவேந்தர்'** என்றும் ஒரு பெயர் உண்டு. அவர் திருப்பதிகங்கள் மிகவும் உருக்கமானவை; கடவுளன்பை மிக விளக்கும். அன்புச் சுவையில் இணையற்றவை. உல கம் உய்வதற்கு அவர் அருளிச்செயல் பேருதவியாயிற்று. அப் பெருமான் திருப்புகலூரில் நிறையத் திருப்பதிகங்கள் அருளிச்செய்தார். இதனேடு உழவாரத் தொண்டும் இடையருது செய்துவந்தார். இங்ஙனம் மனத்தால் இறை வனை நினைப்பதும், வாயினல் சொன்மாலைகள் அருளுவதும், கையினல் உழவாரத் தொண்டு செய்வதுமாகத், தம் மனம் மொழி மெய் என்னும் மூன்றையும் சிவபெருமான் திருவடி கட்கே உரிமையாக்கிப் பணிசெய்துகொண்டு, பல நாட்கள் அங்கே எழுந்தருளியிருந்தார்.

நாயனருக்கு இப்போது ஆண்டுகள் எண்பத்தொன்று ஆய்விட்டன. இறைவன் திருவடியைத் தவிர வேருென்றி லும் அவருக்குப் பற்றில்லை. இறையருள் தோயும் தகுதி இப்போது அவருக்கு நிரம்பி நின்றது. அப்பரடிகளின் பெருந்தகைமை உலகுக்கு இன்னும் நன்கு புலப்படும் பொருட்டு, எல்லாம் வல்ல இறைவன் அங்கே இரண்டு திரு விளையாடல்களை நிகழ்த்தியருளினர்.

(க) ஒருநாள் அப்பர், திருக்கோயிலின் திருமுன்றிலில் வழக்கம்போல உழவாரத் தொண்டு செய்துகொண்டிருந்தார். உழவாரத் தொண்டு என்பது, உழவாரப் படையை நிலத்தில் பாய்ச்சிப், புற்களைச் செதுக்கித், தரையைத் துப்புரவு செய்தல். அங்ஙனம் அவர் செய்யும்பொருட்டு அன்றும் தமது உழவாரப் படையை நிலத்தில் பாய்ச்சினர். அப்போது, அங்கே பொன்னும் மணியும் முத்தும் ஒளிர்ந்து கொண்டிருக்கக் கண்டார். நாயனர் உழவாரப் படையை நிலத்திலிருந்து எடுத்தபோது, அதன்கண் அப் பொன்னும் முத்தும் மணியும் நிறைய வந்தன. புல்லும் மண்ணும்கூட உடன்வந்தன. நாயனர் திருவுள்ளம் எல்லாவற்றையும் ஒன்றாகவே கருதியது. எல்லாவற்றையும் அவர் ஆண்டவன் திருவுருவமாகவே எண்ணி உளமுருகினர். அப்போது, அவர் திருவுள்ள மலரிலிருந்து,

"அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாய் என்நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வம்நீயே."

என்னும் தேவாரத் தேன் சிந்தியது. நாயனர் இவ்வரிய திருப்பதிகத்தை ஓதிக்கொண்டே, அப் பொற்கட்டிகளையும் மணிக்கற்களையும் புற்களோடும் பருக்கைக் கற்களோடும் சேர்த்துக் குளத்தில் எறிந்துவிட்டார்.

(உ) அதன்பின், விண்ணுலகத்திலிருந்து அரம்பையர் சிலர் வந்து, அவர்முன் ஆடல் பாடல் செய்தனர். அவர் உள்ளம் அவற்றிலெல்லாம் செல்லவில்லை. எல்லாவற்றிலும் இறைவன் திருவருள் ஒன்றையே உணர்ந்துகொண்டிருந்தது.

பின்பு, சில நாட்களிலெல்லாம் திருநாவுக்கரசு நாயனருக்கு இறைவன் திருவடிகளைச் சாரும் நினைவு எழுந்தது. அதற்காக அவர், பெருமான் திருவருளை எதிர்நோக்கிக்கொண்டு இருந்தார். முடிவில் ஒரு சித்திரைத் திங்களில் சதயத் திருநாளில், இறைவன் திருவருள் அவருக்கு விளங்கது. அன்று அப்பரடிகள்,

"எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே."

என்று ஓர் அரிய திருத்தாண்டகச் செழுந்தமிழ் பாடிச், சிவபெருமான் திருவடி நீழலிற் கலந்தருளினர். அன்று முதல் தமிழ்மக்கள், **சொல்லரசருடைய** அருமை பெருமைகளை எண்ணி எண்ணி அன்புமிக்கவராய், ஆண்டுதோறும் அவரது சித்திரைச் சதயத் திருநாள் கொண்டாடி, அவர் அருளிச்செய்த தீந்தமிழ்த் தேவாரங்களை மனமுருகிப் பாடும் பேறு பெற்றிருக்கின்றனர்.

அருஞ்சொல் உரை

[எண் பக்கத்தைக் குறிக்கும்]

க. படைச்சால் - ஏர் உழுது கொண்டு போகும் இடம்.

உ. (செய்யுள்) கால் - வாய்க் கால். கண் - கணு. பால் - பக்கம். சால் - ஏர்ச்சால்; தாள நிரை-முத்து வரிசை. தடம் - குளம்.

ந. துலங்கிற்று - விளங்கியது.

ச. (செய்யுள்) அனையும் - அன்னையும். இசைவிப்பன் - பொருந் தச் செய்வேன்.

ரு. (செய்யுள்) தயா-கருணை. உம்பர் உலகு - மேலுலகம். பொன் மணிநூல் - தாலிச் சரடு. இம்பர் - இவ்வுலகத்தில்.

சு. தூய்மையாக - அழுக்கில் லாமல். இன்னல் - துன்பம். இயற் றக்கூடாது - உண்டாக்கக் கூடாது.

கூ. பொல்லாங்கான - தீமை யான. கோலி - வளைத்து.

ய. பரிவோடு - அன்போடு.

கஉ. ஈகைவினை - கொடுக்கும் தொழில். தலைநின்றவர் - சிறப்பாக நின்றவர். தேறினர் - தெளிவடைந் தார்.

கந. கவன்றார் - கவலைப்பட் டார். பற்றற்றவரானார் - எதிலும் ஆசையில்லாதவரானார். கீழ்ப்பால்- கிழக்குப் பக்கத்தில். தூப்புரவு - தூய்மை.

கச. கிளர்ச்சி - ஊக்கம். தளிர்த் திருக்கும் - தளிர்த்திருக்கும். தோ யும்போது - படியும்போது. திருப் பள்ளித்தாமம் - மாலை.

கரு. (செய்யுள்) புலர்வதன் முன் - பொழுதுவிடியுமுன். அலகு- துடைப்பம். புனிறு - கன்றுபோட்ட நிலைமை. தொடுத்து - கட்டி. பண் பினால் - தன்மையினால்.

கசு. (செய்யுள்) பரசமயக்குழி- அயல் மதம் என்னும் பள்ளம். ஈர்த் து - இழுத்து.

கஎ. மடுத்து - புகும்படிசெய்து. வழுத்தி - வணக்கவுரை சொல்லி.

(செய்யுள்) பண்டு-முன்பு. இறை - சிறிது. கண்தரு நெற்றியர்- நெற்றியில் கண்ணையுடையவர்; அடும் - வருத்தும். மண்டு - நிறைந்த. புக் கது - புகுந்தது.

கஅ. சூலைநோய் - வயிற்றுநோய். வட அனல் - வாட்டும் தீ. பீலி - மயில் தோகை.

ககூ. உளைந்த - நொந்த. இடுக் கண் - துன்பம். ஏவினர் - கட்டளை யிட்டார். புறத்தே - வெளியே.

உய. அயர்ந்தார் - மனம் தளர்ந் தார்.

உக. குறையிரந்து - குறைக்கு வேண்டி. தாளிணை - இரண்டு திரு வடிகள்.

உஉ. விடியுந்தறுவாய் - விடியும் நேரம்.

(செய்யுள்) கூற்று - நமன். விலக்ககிலீர் - விலக்கினீரில்லை. ஏற் றூய்-விடையின்மேல் ஏறிவருவோய்.

உ௪. (செய்யுள்) மையல் - மயக் கம். அலர் - பரந்த. சீர் - புகழ். எய் துற்ற - அடைந்த. அறா - நீங்காத. ஈறு இன்றி - முடிவில்லாமல். கசிந்தனர் - உருகினர்.

உரு. (செய்யுள்) நமன் - கூற்று வன். நடலை - நடுக்கம். ஏமாப்போம் - வலியுடையோம்.

உசு. (செய்யுள்) குழை - குண் டலம். கோமாற்கே - தலைவனுக்கே. கொய் - தெரிந்தெடுத்த.

நீற்றறை - பொருள்களைச் சாம்பராக்கும் நெருப்பு உள்ள அறை. கனன்று - கனைந்து. தாழ்க்கோல் - தாழ்ப்பாள்.

உஅ. மறுகின - குழம்பின. பிளி றிக்கொண்டே - கூவிக்கொண்டே. அனைவரும் - எல்லாரும். விதிர்ப் பெய்தினர் - நடுக்கமடைந்தனர்.

உகூ. உழக்கி - கலக்கி. சூழ்ந்து - ஆராய்ந்து. உறைப்புடைய - உறுதி யுடைய.

(செய்யுள்) சொல்துணை - சொல்லையே துணையாக் உடைய.

௩0. சுண்ணம் - மணமுள்ள பொடிகள்.

௩௩. உறையும் - தங்கியிருக்கும். ஒவ்வாத - பொருந்தாத.

௩௪. பனைக்கை - பனைபோன்ற கை. வேழம் - யானை.

௩எ. களி - மிக்க மகிழ்ச்சி. துளும்பிற்று - நிறைந்தது. அடியார் குழாம் - அடியார் கூட்டம்.

௩கூ. அளவளாவிக் கொண்டு - மனங் கலந்துகொண்டு. இசைவு - இணக்கம்.

௪0. சுவடு - அடையாளம். பொறித்தருள வேண்டும் - எழுதி யருளவேண்டும். வேட்கை - மிக்க விருப்பம்.

௪க. மறையவர் - அந்தணர். அன் பின் திறமெல்லாம் - அன்பின் வகை யெல்லாம்.

௪௩. நறுஞ்சுவை - நல்ல சுவை; மிக்க சுவை.

௪௪. பரிமாறப்பட்டன - உணவு படைக்கப்பட்டன.

௪எ. வாசி - வட்டம்.

௪அ. நெக்குருகினர் - உள்ளம் கனிந்து உருகினர். அடைக்கவும் - மூடவும்.

௪கூ. ஆணை - கட்டளை.

௫0. (செய்யுள்) வேய் - மூங் கில். பங்கன் - பங்கு உடையவன்; பாகமாக உடையவன். கண்டன் - கழுத்துடையவன். மாசுஅறு - மறு வில்லாத. திங்கள் - நிலா. ஆசு - குற் றம்.

௫க. போந்து - வந்து. மிக்கு - மிகுந்து.

௫௨. பொதிசோறு - கட்டுச் சோறு. வாவி - குளம். பருகி - குடித்து. எழவில்லை - ஊக்கங்கொள்ளவில்லை.

௫௩. (செய்யுள்) பைம்பொனே - பசும்பொன்னே. மலர்செய் - மலர் போன்ற. அம் - அழகிய. கொழித்து - தெள்ளி. அணி அண்ணமலை - அழகிய திருவண்ணமலை.

௫௪. கல் சுரம் - பருக்கைக்கல் உள்ள வழி. பாட்டுநிலம் - காடுமுரடான மேட்டுநிலம். பாடுவரையில் - கணைக்கால் வரையில். அசைந்து - தளர்ந்து.

௫௫. நைந்து - குழம்பி. கடைக் கணித்து - கடைக்கண் பார்வை செய்து; அதாவது, அருள்செய்து. மரவுரி - மரத்திலிருந்து உரித்தெடுத்த நார். நிலையா - நிலைத்தலில்லாத.

௫௬. திருவுரு - திருவுருவம். கரந்து - மறைந்து.

௫௭. அரம்பையர் - தேவமாதர். பணிசெய்து - தொண்டு செய்து. புளகிக்க - பூரிக்க. ஆர - மனம் அமைய. உருக் கரந்தருளினர் - உருவம் மறைந்தருளினர். ஆராமையால் - மனம் அமையாமையால்.

(செய்யுள்) மாதர் - அழகினையுடைய. பிறைக்கண்ணி - பிறைமாலை. போதொடு - மலர்களோடு.

௫௮. (செய்யுள்) யாதும் - சிறிதும். சுவடுபடாமல் - கால்அடி படாமல்; ஓசைபடாமல் என்பது கருத்து. கடைக்கணிக்கின்றேன் - முயல்கின்றேன் என்பது கருத்து. நாகு - ஆன்.

௫௯. திருச்சின்னம் - புறப்படும்போது ஊதும் இசைக்குழல்.

௬௰. சிவிகை - பல்லக்கு.

௬௧. தென்னவனர் - பாண்டியனர். வாகீசர் - சொல்லரசர். ஆரகிலா - அமைதலில்லாத.

௬௨. அருளிச்செயல் - அருளிச்செய்த திருப்பாடல்கள்.

௬௩. (செய்யுள்) ஐயன் - குரு. ஒப்புடைய - சமமான. துய்ப்பன - நுகரப்படும் பொருள்கள். உய்ப்பன - நுகர்வதற்குச் செலுத்தும் சுவை உணர்வுகள். துரப்பிப்பாய் - செலுத்துவாய். ஏறு ஊர்ந்த - விடையின் மேல் எழுந்தருளிய.

௬௪. சாரும் - அணையும். விளைந்தது - முழுமையாய் நிறைந்து நின்றது.

(செய்யுள்) எண்ணுகேன் - எண்ணுகின்றநான். எண்ணுகேனே - எண்ணுவேனே. கண்ணிலேன் - வேறு நோக்கமில்லேன். களைகண் - ஆதரவு. ஒண்ணுளே - ஒன்றுளே. ஒக்க - ஒன்ருக. போதகின்றேன் - வருகின்றேன்.

SOLLARASAR

BY

T. S. BALASUNDARAM PILLAI

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD. :
6, CORAL MERCHANT ST. :: MADRAS